24.11.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகம் தவிர்த்து அனைத்து மாநிலங்களிலும் உணவு பாதுகாப்பு சட்டம் 2016ல் அமலாகிறது**



புதுடில்லி: "தமிழகம் தவிர்த்து, பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், அடுத்த ஆண்டு மார்ச்சுக்குள், உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த உள்ளன," என, மத்திய உணவுத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் கூறினார்.

அமல்படுத்தப்படவில்லை நாட்டின் மக்கள் தொகையில், ஏழைகள் என கண்டறியப்பட்டுள்ள, மூன்றில் ஒரு பங்கினருக்கு, மாதம்,5 கிலோ அரிசி, ஒன்று முதல், மூன்றுரூபாய் விலையில் வழங்கப்படவேண்டும் என்பது, உணவு பாதுகாப்பு சட்டத்தின் முக்கிய அம்சம். வறுமை ஒழிப்பு திட்டத்தின் ஒரு அங்கமாக, இந்த திட்டம் கருதப்படுகிறது. உணவு பாதுகாப்பு சட்டம், முந்தைய காங்., அரசால், பார்லிமென்டில், 2013ல் நிறைவேற்றப்பட்டது. ஓராண்டிற்குள், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், இச்சட்டத்தை பின்பற்ற வலியுறுத்தப்பட்டன. எனினும், மூன்று முறை கால நீட்டிப்பு செய்யப்பட்ட பின்னும், நாடு முழுதும், இன்னமும் உணவு பாதுகாப்பு சட்டம் அமல்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், டில்லி யில் நேற்று, அனைத்து மாநில உணவுத் துறை செயலர்கள் மாநாட்டை கூட்டி, உணவு பாதுகாப்பு சட்டத்தை செயல்படுத்துவது குறித்து, அமைச்சர் பஸ்வான் விவாதித்தார். இதன்பின், நிருபர்களை சந்தித்த அவர் கூறியதாவது:உணவு பாதுகாப்பு சட்டத்தை, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அமல்படுத்த, தமிழகம் தவிர்த்து, அனைத்து மாநிலங்களும் உறுதியளித்து உள்ளன.

மொத்தமுள்ள, 29 மாநிலங்கள் மற்றும் ஏழு யூனியன் பிரதேசங்களில், இந்த சட்டத்தை இதுவரை அமல்படுத்தாத, 14 மாநிலங்களில், ஆந்திராவும், சிக்கிமும், இந்த ஆண்டிற்குள் அமல்படுத்த உறுதியளித்து உள்ளன. மார்ச் மாதத்திற்குள்...உத்தர பிரதேசம், மேகாலயா, ஜம்மு - காஷ்மீர் ஆகிய மாநிலங்களும், அந்தமான், நிகோபார் யூனியன் பிரதேசமும், அடுத்த ஆண்டு ஜனவரியில் அமல்படுத்த உள்ளன. குஜராத், கேரளா, அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து மாநிலங்கள், மார்ச் மாதத்திற்குள் செயல்படுத்த உள்ளன.இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்றதமிழக அதிகாரிகள், 'தமிழகத்தில், அனைவருக்கும் குறைந்த விலையில் அரிசி வழங்கும் திட்டம், சிறப்பாகசெயல்படுத்தப்படுவதால், உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த வில்லை; அடுத்த ஆண்டு ஜூலைக்குள் அமல்படுத்த உள்ளோம்' என்றனர்.

ரூ.4,000 கோடி மிச்சம்போலி ரேஷன் கார்டுகள்

ஒழிக்கப்பட்டு உள்ளதால், இரு ஆண்டுகளில், 4,000கோடி ரூபாய் மத்திய அரசுக்கு மிச்சமாகி உள்ளது. உணவு மானியத்தை நுகர்வோரின் வங்கிக் கணக்கில் வரவு வைப்பது குறித்து, மாநில அரசுகளை, நாங்கள் வற்புறுத்த மாட்டோம்; அது, அவர்களின் விருப்பத்தை பொருத்தது. விருந்தா ஸ்வரூப்மத்திய உணவுத் துறை செயலர்

**நீரிழிவு நோயாளிகளுக்கு 'சுகர் ப்ரீ' நெல் சாகுபடி**



திருப்பதி:நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற, 'சுகர் ப்ரீ' நெல் சாகுபடியை, ஆந்திர விவசாயிகள் துவக்கி உள்ளனர்.நீரிழிவு நோய் பாதித்தவர்கள், அரிசி சாதம் சாப்பிட கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. அரிசி சாதத்தை குறைவாக சாப்பிடும்படி கூறுவதோடு, சப்பாத்தி, சோளரொட்டி, கேழ்வரகு களி போன்றவை, தேவையான அளவு எடுத்துக் கொள்ளும்படி பரிந்துரைக்கப்படுகிறது. இந்நிலையை மாற்ற, ஆந்திர மாநில நாகார்ஜுனசாகர் அணை பாசன விவசாயிகள், 'ஆர்.என்.ஆர்., 15048' என்ற, சுகர்ப்ரீ நெல்பயிர் சாகுபடியை அறிமுகபடுத்தியுள்ளனர்.

ஐதராபாத் விவசாய பல்கலைக்கழக பேராசிரியர் ஜெயசங்கர் கண்டு பிடித்த இந்த நெல்லானது, தற்போது, 2,000 ஏக்கர் அளவுக்கு பயிரிடப்பட்டு உள்ளது. இந்த புதிய வகை நெல், 120 முதல், 125 நாட்களுக்குள் விளைந்து, அறுவைடைக்கு வந்து விடும். சாதாரண ரக நெல் விளைச்சலுக்கு தேவையான செலவில், 50 சதவீதம் மட்டுமே, இதற்குப் போதுமானது. ஏக்கருக்கு, 40 முதல், 45 மூட்டை நெல் கிடைக்கும். குளுக்கோஸ் அளவு குறைவு: சாதாரண நெல் ரகங்களில் தயாராகும் அரிசியில், குளுக்கோஸ் அளவானது, 60 முதல், 80 சதவீதம் வரை இருக்கும். அதனால், நீரிழிவு நோயாளிகள், இந்த நெல்லில் தயாரான அரிசி சாதத்தை அதிக அளவில் சாப்பிட தடை விதிக்கின்றனர். ஆனால், இந்த புதிய வகை நெற்பயிரில் தயாராகும் அரிசியில், 30 முதல், 40 சதவீதம் மட்டுமே குளுக்கோஸ் இருக்கும். இதை, மத்திய உணவு கட்டுபாட்டுத் துறை அதிகாரிகளும் உறுதி செய்துள்ளனர். இந்த புதியரக நெற்பயிரை பயிரிட, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் மூலம், நல்ல மகசூல் மட்டுமின்றி, லாபமும் கிடைக்கும் என, விவசாயிகள் நம்புகின்றனர்.

### நீர்பிடிப்பு பகுதியில் மழை நீர் வரத்து மேலும் அதிகரிப்பு

நீர்பிடிப்பு பகுதிகளில், மீண்டும் பெய்துவரும் மழையால், சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.கடந்த அக்., மாதத்திற்கு முன்பு வரை, சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளின் நீர்மட்டம் கவலைக்கிடமாக இருந்தது. இதனால், சென்னைக்கு குடிநீர் அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டது. வட கிழக்கு பருவமழையால், இந்த ஏரிகளின் நீர்மட்டம் கணிசமாக அதிகரித்து வருகிறது. மொத்தம், 11 டி.எம்.சி., கொள்ளளவு கொண்ட நான்கு ஏரிகளிலும் தற்போது, 9.43 டி.எம்.சி., தண்ணீர் உள்ளது. கடந்த, இரு நாட்களாக குறைந்து இருந்த நீர்வரத்து,தொடர்ந்து பெய்து வரும் மழையால் மீண்டும் அதிகரிக்க துவங்கிஉள்ளது. நீர்வரத்து மீண்டும் அதிகரித்துள்ளதால், பூண்டி, புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளில் இருந்து, உபரிநீர் வெளியேற்றும் பணி நடக்கிறது. சோழவரம் ஏரியில் இருந்து உபரிநீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

### 15 அணைகளில் 114 டி.எம்.சி., கையிருப்புபாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தி

பொதுப்பணித்துறையின், 15 முக்கிய அணைகளில், 114 டி.எம்.சி., நீர் கையிருப்பில் உள்ளது; இதனால், பாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தியாகி உள்ளது.

* மேட்டூர், பவானி சாகர், முல்லைப் பெரியாறு உள்ளிட்ட, 15 முக்கிய அணைகளின் மொத்த கொள்ளளவு, 198 டி.எம்.சி., வடகிழக்கு பருவ மழை துவங்குவதற்கு முன், இந்த அணைகளில், 60

டி.எம்.சி., நீர் மட்டுமே இருந்தது

* தற்போது, 15 அணைகளில், 114 டி.எம்.சி., நீர் கையிருப்பில் உள்ளது. மேட்டூர், பவானி சாகர் அணைகளில் மட்டுமே, நீர் இருப்பு குறைவாக உள்ளது; மற்ற அணைகளில், போதுமான அளவில் நீர் இருப்பு உள்ளது

* பருவ மழை தொடரும் என்பதால், அணைகளின் நீர்மட்டம் மேலும் உயரும். இதன் மூலம், பல மாவட்டங்களின் பாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தியாகிஉள்ளது.

**கனமழை விட்டபாடில்லை; வெள்ள காடான கடலூர்**

கடலூர்:கடலூரில் நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக, மாவட்டம் மீண்டும் வெள்ளக் காடாக மாறியது. வங்கக் கடலில், உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கடலூர் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் நேற்று முன்தினம், கனமழை கொட்டித் தீர்த்தது. ஒரே நாளில், கடலூரில், 145 மி.மீ., மழை பதிவானது. மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகள், ஏற்கனவே நிரம்பி விட்டதால், வடிகால் வழியில் திருப்பி விடப்படுகிறது. ஏற்கனவே, மழை வெள்ளம் சூழ்ந்ததால், மீண்டும், 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மழை வெள்ளத்தில் தவித்தனர். அதிகாரிகள், மழைநீர் சூழ்ந்த பகுதிகளைப் பார்வையிட்டு, பாதித்த மக்களை மீட்டு, அருகில் உள்ள முகாம்களில் தங்க வைத்தனர். கன மழையால் முதுநகர் ரயில் நிலையத்தில், தண்டவாளங்களில் தண்ணீர் தேங்கியது.

இதனால் கடலூர், முதுநகர் வழியாக செல்லும், 10க்கும் மேற்பட்ட ரயில்கள், ஒரு மணி முதல் ஒன்றரை மணி நேரம், தாமதமாக புறப்பட்டுச் சென்றன.

**தாமிரபரணியில் வெள்ளம் குற்றாலத்தில் குளிக்க தடை**



திருநெல்வேலி:நெல்லையில், கடனாநதி, ராமநதி அணைகள் நிறைந்ததால், உபரிநீர் திறந்து விடப்பட்டது. இதனால், தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில், நேற்று முன்தினம் பிற்பகலில் இருந்து பலத்த மழை பெய்தது. பாபநாசம் அணைப்பகுதியில் அதிகபட்சமாக, 145 மி.மீ., பெய்தது. அணைக்கு வினாடிக்கு, 4,727 கனஅடி நீர்வரத்து இருந்தது. 109.15 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில், 4 அடி உயர்ந்து, 113.45 அடியை எட்டியுள்ளது. மாவட்டத்தில் மொத்தமுள்ள, 11 அணைகளில் கருப்பாநதி, குண்டாறு, ராமநதி, கடனாநதி, நம்பியாறு ஆகிய அணைகள் நிரம்பிவிட்டன. அணைகள் நிறைந்து, வழிந்தோடும் உபரிநீர், தாமிரபரணியில் செல்கிறது. வினாடிக்கு, 7,000 கனஅடி வீதம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நெல்லை குறுக்குத்துறை சுப்ரமணிய சுவாமி கோவிலின் மேல்தளத்தை தொட்டபடி தண்ணீர் சென்றது. தாமிரபரணியில் செல்லும் தண்ணீர் சேமிக்க முடியாமல், ஸ்ரீவைகுண்டம் அணையை கடந்து வீணாகக் கடலுக்கு செல்கிறது. அருவிகளில் வெள்ளம்: மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையால், குற்றாலம் மெயின் அருவியில், நேற்று முன்தினம் மாலையில் இருந்து வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால், பயணி கள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. பழைய குற்றாலம், ஐந்தருவி ஆகிய வற்றிலும் பயணிகள் குளிக்க முடியவில்லை.

**தூத்துக்குடியை புரட்டிப்போட்ட கனமழை: வெள்ள காடான கடலூர்**

தூத்துக்குடி:தூத்துக்குடியில் கொட்டித்தீர்த்த மழையால் நேற்று வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டது. தண்ணீர் சூழ்ந்ததால் பலர் வீட்டு மாடிகளில் தஞ்சம் புகுந்தனர். உணவு, குடிநீர் இல்லாமல் தவித்து வரும் நிலையில், வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டவர்களை மீட்கும் பணியில் சிக்கல் நீடிக்கிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் இரு நாட்களாக கனமழை பெய்து வருவதால், அனைத்து நீர்நிலைகளும் நிரம்பி வழிகின்றன. நேற்று மழை நீர் வெள்ளப்பெருக்காக மாறியது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட தீயணைப்புத்துறையினர் மற்றும் அனல் மின் நிலையம், துறைமுகம், கடலோர காவல்படையினர் முகாமிட்டனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை ரப்பர் படகு மூலம் மீட்க முயன்றனர்.

படகு கவிழ்ந்ததால் போலீஸ்காரர் ராமராஜன், அந்தோணியார்புரம் பகுதியில் அடித்து செல்லப்பட்டார். அவரை தீயணைப்புத்துறையினர் மீட்டனர்.

### தட்டி எழுப்பிய வெள்ளம்:

சங்கரன்கோவில், கழுகுமலை, கடம்பூர், கயத்தாறு, ஓட்டப்பிடாரம் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கொம்பாடி ஓடை நிறைந்து கோரம்பள்ளம் குளமும் நிரம்பியது. காலை 5 மணிக்கு துவங்கிய வெள்ளப்பெருக்கு வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த மக்களை தட்டி எழுப்பியது. வெள்ளப்பெருக்கு அதிகரித்து புதுக்கோட்டை பகுதியில் உயர்மட்ட பாலத்தில் நிறைந்து சென்றது. பின், தண்ணீர் தடம் மாறி மடத்தூர், சங்கரப்பேரி, மறவன்மடம், செக்காரக்குடி, கோரம்பள்ளம், சிப்காட், பெரியநாயகிபுரம், சோரீஸ்புரம், கலெக்டர் அலுவலகம், எஸ்.பி., அலுவலகங்களில் வெள்ளம் சூழ்ந்தது. இப்பகுதியினர் வீட்டு மாடிகளில் தஞ்சம் புகுந்தனர். பலர் மரங்களிலும், மின் கம்பங்களை பிடித்து நின்றிருந்தனர்.கலெக்டர் அலுவலகம், சிப்காட், அரசு ஐ.டி.ஐ., சிப்காட், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் மற்றும் சில தனியார் ஆலைகளில் இரவுப் பணியில் இருந்த பணியாளர்கள் சிக்கி கொண்டனர். இவர்களை கயிறுகள் கட்டி தீயணைப்புத்துறையினர் மீட்டனர்.

இரு வாலிபர்கள் மீட்பு:

சோரீஸ்புரத்தில் இருந்து வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட ராஜா, 14, என்ற மாணவர், கலெக்டர் அலுவலகத்தில் உள்ள முள்செடிகளில் சிக்கி தவித்தார். அரியகுளத்தை சேர்ந்த கணேசன், 19, என்பவர் மின் கம்பத்தை பிடித்தபடி தவித்தார். இருவரும் மீட்கப்பட்டனர். கலெக்டர் அலுவலக பகுதியில் சிக்கியிருந்த பலரும் மீட்கப்பட்டனர்.உணவு இன்றி தவிப்பு: அரசு ஊழியர் குடிருப்பு, வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் பலர் உணவு, குடிநீர் கிடைக்காமல் அவதிப்பட்டனர். வெள்ளப் பெருக்கு வந்து கொண்டே இருப்பதால், சிக்கியவர்களை மீட்க முடியாமல் மீட்பு படையினர் தவித்து வருகின்றனர்.

### போக்குவரத்து துண்டிப்பு:

தூத்துக்குடி-- திருநெல்வேலி நான்கு வழிச்சாலையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் போக்குவரத்து பாதித்தது. 'டிவைடர்'களை உடைத்து தண்ணீர் வெளியேற்றப்பட்டது. காலை 8 மணி முதல் நிறுத்தப்பட்டது. திருநெல்வேலியில் இருந்து புதுக்கோட்டை வரை மட்டுமே பஸ்கள் இயக்கப்பட்டன.தூத்துக்குடியில் இருந்து திருச்செந்தூர் ரோடு வழியாக முக்காணி, ஆத்தூர், சாகுபுரம், குரும்பூர், வழியாக திருநெல்வேலிக்கு மாற்றுப்பாதை வழியாக இயக்கப்பட்டது. மின் இணைப்பு துண்டிப்பு: தற்போது வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு உள்ளது. மாலை 6 மணி வரை மீட்பு பணிகள் நடக்கும். அதன்பின்பு மாடிகளில் தஞ்சம் புகுந்துள்ளவர்களை மீட்பதில் சிக்கல் ஏற்படும் நிலை உள்ளது.

### அதிகாரிகள் பார்வை:

வெள்ள நிவாரணப்பணி சிறப்பு அதிகாரி குமார் ஜெயந்த், கலெக்டர் ரவிக்குமார், டி.ஆர்.ஓ., முருகையா ஆகியோர் அந்தோணியார்புரம் பகுதியில் மீட்பு பணிகளை பார்வையிட்டனர்.

**மணியாச்சியில் 113 மி.மீ., மழை:**

துாத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த கன மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதிகபட்சமாக மணியாச்சியில் 113 மி.மீ., மழை பதிவானது.துாத்துக்குடியில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை பெய்த மழை (மி.மீ.,):திருச்செந்துார்- 14, காயல் பட்டினம்- 20, குலசேகரபட்டினம்- 18, விளாத்திகுளம்-11, காடல்குடி- 20, வைப்பாறு -19, கயத்தாறு- 43, கடம்பூர்- 31, கழுகுமலை- 20, கோவில்பட்டி- 30, ஓட்டப்பிடாரம்- 80, மணியாச்சி- 113, வேடநத்தம்- 10, சாத்தான்குளம், எட்டயபுரம்- 13, துாத்துக்குடி- 16.

**வெள்ள காடான கடலுார்:**

கடலுாரில் நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக, மாவட்டம் மீண்டும் வெள்ளக் காடாக மாறியது. வங்கக் கடலில், உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கடலுார் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் நேற்று முன்தினம், கனமழை கொட்டித் தீர்த்தது. ஒரே நாளில், கடலுாரில், 145 மி.மீ., மழை பதிவானது. மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகள், ஏற்கனவே நிரம்பி விட்டதால், வடிகால் வழியில் திருப்பி விடப்படுகிறது. ஏற்கனவே, மழை வெள்ளம் சூழ்ந்ததால், மீண்டும், 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மழை வெள்ளத்தில் தவித்தனர். அதிகாரிகள், மழைநீர் சூழ்ந்த பகுதிகளைப் பார்வையிட்டு, பாதித்த மக்களை மீட்டு, அருகில் உள்ள முகாம்களில் தங்க வைத்தனர். கன மழையால் முதுநகர் ரயில் நிலையத்தில், தண்டவாளங்களில் தண்ணீர் தேங்கியது. இதனால் கடலுார், முதுநகர் வழியாக செல்லும், 10க்கும் மேற்பட்ட ரயில்கள், ஒரு மணி முதல் ஒன்றரை மணி நேரம், தாமதமாக புறப்பட்டுச் சென்றன.**குற்றாலத்தில் குளிக்க தடை:** திருநெல்வேலி:நெல்லையில், கடனாநதி, ராமநதி அணைகள் நிறைந்ததால், உபரிநீர் திறந்து விடப்பட்டது. இதனால், தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில், நேற்று முன்தினம் பிற்பகலில் இருந்து பலத்த மழை பெய்தது. பாபநாசம் அணைப்பகுதியில் அதிகபட்சமாக, 145 மி.மீ., பெய்தது. அணைக்கு வினாடிக்கு, 4,727 கனஅடி நீர்வரத்து இருந்தது. 109.15 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில், 4 அடி உயர்ந்து, 113.45 அடியை எட்டியுள்ளது. மாவட்டத்தில் மொத்தமுள்ள, 11 அணைகளில் கருப்பாநதி, குண்டாறு, ராமநதி, கடனாநதி, நம்பியாறு ஆகிய அணைகள் நிரம்பிவிட்டன. அணைகள் நிறைந்து, வழிந்தோடும் உபரிநீர், தாமிரபரணியில் செல்கிறது. வினாடிக்கு, 7,000 கனஅடி வீதம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நெல்லை குறுக்குத்துறை சுப்ரமணிய சுவாமி கோவிலின் மேல்தளத்தை தொட்டபடி தண்ணீர் சென்றது. தாமிரபரணியில் செல்லும் தண்ணீர் சேமிக்க முடியாமல், ஸ்ரீவைகுண்டம் அணையை கடந்து வீணாகக் கடலுக்கு செல்கிறது. அருவிகளில் வெள்ளம்: மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையால், குற்றாலம் மெயின் அருவியில், நேற்று முன்தினம்

மாலையில் இருந்து வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால், பயணி கள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. பழைய குற்றாலம், ஐந்தருவி ஆகிய வற்றிலும் பயணிகள் குளிக்க முடியவில்லை.

## அடுத்த சில நாட்களுக்கு மிதமான மழை தான்!



சென்னை:'தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த சில நாட்களுக்கு மிதமான மழை பெய்யலாம்' என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை:வங்கக் கடலில் உருவாகி உள்ள காற்று அழுத்தத் தாழ்வு நிலை, மேற்கு நோக்கி நகர்ந்து, குமரி கடல் அருகே மையம் கொண்டு உள்ளது. இதனால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியின் அனேக இடங்களிலும், தமிழகத்தின் பிற மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும் கனமழை பெய்யலாம்.சென்னையில் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நாளை முதல் நவ., 27 வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மிதமான மழை பெய்யலாம். கனமழைக்கு வாய்ப்பு இல்லை. நேற்று காலை 8:30 மணி வரை தமிழகத்தில் அதிகபட்சமாக மயிலாடுதுறை-20; காரைக்காலில் 19 செ.மீ., மழை பெய்துள்ளது.108 செ.மீ., மழை; சென்னையின் சாதனை அளவு'சென்னையில், 97 ஆண்டுகளுக்கு பின், நடப்பு நவம்பரில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கூடுதல் மழை பெய்யலாம்' என கணிக்கப்பட்டுள்ளது.வட கிழக்கு பருவ மழை அக்டோபரில் துவங்கி டிசம்பர் வரை பெய்யும். குறிப்பாக நவம்பரில் அதிக அளவு மழை பெய்யும். 15 நாட்களுக்கு மேல் கடலோர மாவட்டங்கள் மற்றும் வட மாவட்டங்களில் மழை தீவிரமாக பெய்து வருகிறது. வங்கக் கடல் மற்றும் அரபிக்கடலில் ஏற்பட்ட நான்கு காற்று அழுத்தத் தாழ்வு நிலைகளால் சராசரிக்கும் அதிகமான மழை கிடைத்துள்ளது.

ஆய்வு மைய புள்ளி விவரப்படி, இதற்கு முன் 1918 நவம்பரில் 108 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. நடப்பு ஆண்டு நவ., 1 முதல் 22 வரை சென்னையில் 104 செ.மீ., மழை பெய்துள்ளது. இன்னும் 4 செ.மீ., மழை பெய்தால் இதுவே நவம்பரில் பெய்த அதிகபட்ச மழையாக இருக்கும். வரும் நாட்களில் அதற்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## 66 அடியை எட்டுகிறது வைகை அணை

தேனி:தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்வதால் முல்லைபெரியாறு, மூல வைகை, கொட்டக்குடி ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்து, 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர் மட்டம் மளமளவென உயர்கிறது.நேற்றைய நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 65.19 அடியாகவும், முல்லை பெரியாற்றில் இருந்து நீர்வரத்து 1,465 கன அடி, மூலவைகை ஆற்றில் இருந்து 884 கன அடி என மொத்தம் 2,340 கனஅடி நீர் (வினாடிக்கு ) வரத்து இருந்தது. இதனால், நேற்று மாலை அணை நீர்மட்டம் 65.31 அடியாக இருந்தது.

நீர் மட்டம் 66 அடியை எட்டியதும் முதல் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். ஆற்றோரங்களில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுவர். இதற்கு முன்பு கடந்த 2011க்கு பிறகு இந்த ஆண்டு தான் வெள் அபாய எச்சரிக்கை அறிவிப்பு செய்யப்பட உள்ளது.

## கேட்டது 2,000 கோடி... கிடைத்தது ரூ.940 கோடி!



'தமிழகத்தில், வெள்ள நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, 8,481 கோடி ரூபாய் தேவை. இடைக்கால ஏற்பாடாக, 2,000 கோடி ரூபாயை, மத்திய அரசு உடனடியாக தர வேண்டும்' என, முதல்வர் ஜெயலலிதா நேற்று காலை, மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பினார். அடுத்த சில மணி நேரங்களில், முதற்கட்டமாக, 940 கோடி ரூபாய் ஒதுக்கி, பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

**தமிழக வெள்ள சேதம் தொடர்பாக, பிரதமருக்கு, முதல்வர் ஜெயலலிதா, நேற்று எழுதிய கடிதத்தின் முக்கிய அம்சங்கள்:**வங்கக் கடலில் உருவான உயர் காற்றழுத்த தாழ்வு நிலை, நவ., 10ல், மரக்காணம் அருகே, தமிழக கடற்கரையைத் தாக்கியது. இதனால், கடலுார், காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் பெய்த பலத்த மழை தொடர்வது போல, சேதமும், அழிவும் தொடர்கிறது; நான்கு லட்சம் பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

* மழை, வெள்ளத்திற்கு, 169 பேர் இறந்துள்ளனர். உட்கட்டமைப்புகளும், மின்சார வினியோகமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன* நிவாரணம் மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள,

தமிழக அரசு சார்பில், 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது* கட்டமைப்புகளை நிரந்தரமாக சீரமைக்க, 8,481 கோடி ரூபாய் தேவை
* மத்திய அரசின் நிதியுதவியை விரைந்து வழங்க, சேத மதிப்பீடுகள் குறித்து, நேரடியாக ஆய்வு செய்ய, தமிழகத்திற்கு மத்திய குழுவை, உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்
* இடைக்கால நிவாரணமாக, 2,000 கோடி ரூபாயை, மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. முதல்வரின் கடிதத்தை, தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஜக்கையன் தலைமையிலான குழு, பிரதமர் அலுவலகத்தில் வழங்கியது. அதை அறிந்த பிரதமர் மோடி, தமிழகத்துக்கு, 940 கோடி ரூபாயை, உடனடியாக ஒதுக்கீடு செய்ய, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.மேலும், 'வெள்ள சேதம் குறித்து, நேரில் ஆய்வு நடத்த, மத்திய அரசு சார்பில், உயர் அதிகாரிகள் குழு விரைவில், தமிழகத்துக்கு அனுப்பப்படும்; இந்த குழு அறிக்கை தந்த பிறகு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' எனவும், மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மத்திய நிதியுதவி கிடைத்தது எப்படி?:

தமிழக அரசு கோரிய சில மணி நேரங்களில், நிதியுதவிக்கான அறிவிப்பு வெளியானது குறித்து, பிரதமர் அலுவலக வட்டாரங்கள் கூறியதாவது:'தமிழக முதல்வர் தரப்பில், கோரிக்கை வந்த பிறகு, வெள்ள நிவாரண நிதி குறித்து முடிவெடுத்துக் கொள்ளலாம்; அதற்கு முன், மத்திய அரசு சார்பில், எந்த அறிவிப்பையும் வெளியிட வேண்டாம்' என, அமைச்சர்களுக்கு, பிரதமர் மோடி அறிவுறுத்தி இருந்தார். பிரதமர் மோடி, வெளிநாட்டு சுற்றுப்பயணத்தில் இருந்த நிலையில், நிதியுதவி குறித்த அறிவிப்பை எப்போது வெளியிடுவது என்பது குறித்தும், அதிகாரிகள் தரப்பில் நேற்று பரிசீலிக்கப்பட்டது.இந்நிலையில், தமிழக அரசின் வருவாய் துறை செயலர் வெங்கடேசன், டில்லி வந்து, முதல்வரின் கடிதம் மற்றும் வெள்ள சேதம் குறித்த விரிவான அறிக்கையை, பிரதமர் அலுவலக அதிகாரிகளிடம் சமர்ப்பித்து, 45 நிமிடம் ஆலோசனை நடத்தினார்.இதன் பிறகே, 'முதற்கட்ட நிவாரண தொகை, 940 கோடி ரூபாய்' என்பது உறுதி செய்யப்பட்டது. இவ்வாறு பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### காங்., அரசு போல் இழுத்தடிப்பு 'நோ':

வறட்சி நிவாரணம் தர, மத்தியில் ஆண்ட, முந்தைய காங்கிரஸ் அரசு, ஆறு மாதம் இழுத்தடித்தது போல அல்லாமல், மோடி தலைமையிலான மத்திய அரசு, வெள்ள நிவாரண நிதியை உடனடியாக அறிவித்துள்ளது, தமிழக மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.பருவ மழை ஏமாற்றியதால், 2013ல், தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டது. ஏரி, குளம், கிணறுகள் வறண்டு, குறுவை, சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டன; சென்னை தவிர, 31 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன.டெல்டா மாவட்டங்களில் ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய்; பிற மாவட்டங்களில், ஏக்கருக்கு, 5,000 ரூபாய் என, 1,775 கோடி ரூபாயை, தமிழக அரசு நிவாரணமாக

அளித்தது.'நிலைமையை சமாளிக்க, மத்திய அரசு, 19 ஆயிரத்து, 665 கோடி ரூபாய் நிவாரணம் தர வேண்டும்' என, அப்போதைய, காங்கிரஸ் அரசிடம், தமிழக அரசு கோரியது. மத்திய குழுவின் வறட்சி நிலை ஆய்வு முடிந்தும், ஆறு மாதமாக இழுத்தடித்த பிறகு, 'யானைப்பசிக்கு சோளப்பொரியாக' வெறும், 645 கோடி ரூபாய் நிவாரணத்தை, மத்திய அரசு அறிவித்தது; இது, தமிழக மக்களிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.தற்போது, 'தமிழகத்தில், வட கிழக்கு பருவ மழை பாதிப்புக்கு, 8,481 கோடி ரூபாய் நிவாரண நிதி வேண்டும்' என, நேற்று காலை, பிரதமர் மோடிக்கு, தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதினார். அடுத்த, இரண்டு மணி நேரத்திற்குள், தமிழக வெள்ள நிவாரண நிதிக்கு, முதற்கட்டமாக, 940 கோடி வழங்குவதாக, பிரதமர் மோடி அறிவித்தார்.முந்தைய மத்திய அரசு போல் நிவாரணத்திற்கு இழுத்தடிக்காமல், உடனடியாக அறிவித்துள்ளது, தமிழக மக்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.'இது முதற்கட்ட நிதி தான்; மத்திய குழு ஆய்வுக்குப் பின், கூடுதல் நிதி கிடைக்கும்' என, தமிழக அதிகாரிகள் நம்பிக்கையில் உள்ளனர்.எனினும், 'இந்த நிதி, எப்படி மக்களைச் சென்றடையப் போகிறது?' என்பதில் குழப்பம் நீடிக்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, மத்திய அரசே, அவரவர் வங்கியில் செலுத்தினால், உண்மையாக பாதிக்கப்பட்டோருக்கு பணம் சென்றடையும்; மூன்றாம் நபர் மூலம் அளிக்கப்படும் போது, நிதியுதவி சரியாகச் சென்றடையாத நிலை ஏற்பட வாய்ப்புள்ளது என, அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

**தமிழகம், புதுச்சேரிக்கு மழை வாய்ப்பு**

சென்னை : காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம், புதுச்சேரியின் பல இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் எனவும் சில இடங்களில் மழை பெய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விடிய விடிய கனமழை**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம், விழுப்புரம், தருமபுரி மாவட்டங்களில் விடிய விடிய கனமழை பெய்து வருகிறது. அம்மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் புகுந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணியில் ஈடுபட தீயணைப்பு துறையினரை மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

**அடையாற்றில் மீண்டும் வெள்ளம்**

சென்னை: சென்னை நகரில் நேற்று மீண்டும் பெய்த தொடர்மழையால், அடையாற்றில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

**வைகை ஆற்றில் வெள்ள அபாய எச்சரிக்கை**

மதுரை: வைகை அணை நீர்மட்டம் 66 அடியை எட்டியதைத் தொடர்ந்து, வைகை ஆற்றில் முதல் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**66 அடியை எட்டுகிறது வைகை அணை**

தேனி:தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்வதால் முல்லைபெரியாறு, மூல வைகை, கொட்டக்குடி ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்து, 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர் மட்டம் மளமளவென உயர்கிறது.நேற்றைய நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 65.19 அடியாகவும், முல்லை பெரியாற்றில் இருந்து நீர்வரத்து 1,465 கன அடி, மூலவைகை ஆற்றில் இருந்து 884 கன அடி என மொத்தம் 2,340 கனஅடி நீர் (வினாடிக்கு ) வரத்து இருந்தது. இதனால், நேற்று மாலை அணை நீர்மட்டம் 65.31 அடியாக இருந்தது.
நீர் மட்டம் 66 அடியை எட்டியதும் முதல் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். ஆற்றோரங்களில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுவர். இதற்கு முன்பு கடந்த 2011க்கு பிறகு இந்த ஆண்டு தான் வெள் அபாய எச்சரிக்கை அறிவிப்பு செய்யப்பட உள்ளது.

**ஆழியாறு அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியது! தீவிர கண்காணிப்பில் அதிகாரிகள்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி ஆழியாறு அணையின் நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி, 115.30 அடியாக உயர்ந்தது. அணை நிரம்பும் நிலையில் உள்ளதால், அதிகாரிகள் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியாறு அணை, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய அணையாக உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர், பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்திற்கும் வழங்கப்படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழைய ஆயக்கட்டில், ஆறு ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்களும்; புதிய ஆயக்கட்டில், 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஆழியாறு ஆறு மூலமாகவும்; புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வேட்டைக்காரன்புதுார் கால்வாய் வழியாகவும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

கடந்தாண்டு பருவமழை கை கொடுத்ததால், ஆழியாறு அணை நீர்மட்டம் கொள்ளளவை எட்டியது. தொடர்ந்து, இரண்டு மாதங்கள் நிரம்பிய நிலையிலேயே அணை காட்சியளித்தது. மேலும், கடந்த ஒரு ஆண்டாக, 100 அடிக்கு குறையாமல் அணை நீர்மட்டம் நீடித்ததால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்தாண்டை போன்று, இந்தாண்டும் பருவமழை கை கொடுத்து, அணை நிரம்பும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இதனால், அணை முழு கொள்ளளவை எட்டுமா என கேள்விக்குறி எழுந்தது. கடந்த சில நாட்களாக, ஆழியாறு மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில், தொடர் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டமும் மெல்ல.. மெல்ல..

உயர்ந்து வருகிறது.நேற்றைய நிலவரப்படி, 120 அடி கொள்ளளவு கொண்ட அணை தற்போது, 115.30 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு, 642 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் மற்றும் பாசனத்திற்காக வினாடிக்கு, 165 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. 14.6 மி.மீ., மழை பதிவாகியிருந்தது.

**முழு கொள்ளளவை எட்டுவது எப்போது?**

'ஆழியாறு அணை நீர்மட்டம் மெல்ல... மெல்ல... உயர்ந்து வருகிறது. இதுபோன்று மழை தொடர்ந்து நீடித்தால், அணை முழு கொள்ளளவை சில நாட்களில் எட்டும் என எதிர்பார்க்கிறோம். தற்போது, அணை நீர்மட்டம் 115 அடியினை எட்டியுள்ளதால், தொடர் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,' என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அமராவதி நீர் மட்டம் உயர்வு திருமூர்த்தியிலும் திருப்தி**

உடுமலை: உடுமலை அருகே அமராவதி அணை நீர்மட்டம், வேகமாக உயர்ந்து, 80 அடியை தாண்டியுள்ளது; அணைக்கு வினாடிக்கு, 2,763 கன அடி வரத்து இருப்பதால், கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

உடுமலை அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டத்துக்குட்பட்ட, 55 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.இத்துடன், அமராவதி ஆற்றை ஆதாரமாகக்கொண்டு, தாராபுரம் நகராட்சி உள்ளிட்ட பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன.

வடகிழக்கு பருவமழை தீவிர மடைந்து, மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கடந்த, 10 நாட்களுக்கும் மேலாக, தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் திட்டங்களுக்கு மட்டும் குறைந்த அளவு தண்ணீர் திறந்து விடப்படுவதால், அணைக்கு வரும் நீர் தேக்கப்பட்டு வருகிறது; 90 அடி கொள்ளளவு கொண்ட அணை நீர்மட்டம், தற்போது, 80 அடியை தாண்டியுள்ளது.

அணை நிரம்பும் நிலையை நோக்கிச்செல்வதால், கண்காணிப்பு பணிகளை, பொதுப்பணித்துறையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி

அணையின் நீர்மட்டம், 80 அடியை தாண்டியுள்ள நிலையில், இந்தாண்டு பாசனத்துக்கு போதுமான அளவு தண்ணீர் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அணையின் நீர்மட்டம், நேற்றைய காலை நிலவரப்படி, மொத்தமுள்ள, 90 அடியில், 80.87 அடியாக இருந்தது.

வினாடிக்கு, 2,763 கன அடி நீர்

வரத்து இருந்தது. அணையில் இருந்து, வினாடிக்கு, 7 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது; அணைப்பகுதியில், 27 மி.மீ., மழை பெய்துள்ளது. நீர் மட்டம், 80 அடியை தாண்டியுள்ளதால், பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மழையில் அழுகிய கத்தரிக்காய்கள்: ஒரு கிலோ ரூ.85



பழநி: பழநி பகுதியில் தொடர்மழை காரணமாக கத்திரிக்காய்கள் அழுகி வீணாகி, சந்தைக்கு வரத்து குறைந்ததால் வெள்ளை கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ.80க்கு விலைபோகிறது. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், பழநி சத்திரப்பட்டி, மொல்லம்பட்டி, சிந்தலவாடம்பட்டி, மாட்டுபாதை, கணக்கன்பட்டி, எரமநாயக்கன்பட்டி பகுதியில் வெள்ளை, பச்சை கத்தரி ரகங்கள் விளைவிக்கப்படுகிறது.தற்போது சில நாட்களாக தொடர் மழை பெய்வதால் அதிக ஈரப்பதம் காரணமாக கத்தரிக்காய்கள் செடியிலேயே அழுகி பழுத்தும், பிஞ்சுகள் உதிர்ந்தும் வீணாகிறது. இதனால் ஒரு ஏக்கருக்கு ஐம்பது கிலோ கிடைத்த நிலைமாறி, பத்து கிலோ கூட கிடைக்கவில்லை. எனவே வரத்துகுறைவால் இரண்டு வாரங் களுக்கு முன் ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.20க்கு விற்ற கத்தரிக்காய் தற்போது ஒரு கிலோ ரூ.80க்கும் மேல் விலை போகிறது. நல்ல விலைகிடைத்தும் விளைச்சல் பாதிப்பால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். சத்திரப்பட்டி விவசாயி ஆறுமுகம் கூறுகையில், “எங்கள் பகுதியில் மட்டும் நூறுஏக்கருக்கு மேல் கத்தரி சாகுபடி செய்துள்ளோம். உரம், மருந்துதெளிப்பு, காய்கள் பறிப்புகூலி என ஏக்கருக்கு ரூ.30ஆயிரம் வரை செலவானது. சிலநாட்களாக தொடர் மழையால் 2 ஏக்கர் கத்தரிச்செடியில் காய்கள் உதிர்ந்தும், அழுகியும், புழுக்கள் தாக்கியும் உள்ளது. மார்க்கெட்டிற்கு வரத்துகுறைந்ததால் பச்சைக்கத்திரி ஒருபை(30கிலோ) ரூ.1500க்கும், வெள்ளைக் கத்தரி ரூ.2500க்கும் விற்கப்படுகிறது. கத்தரியால் இவ்வாண்டு விவசாயிகளுக்கு ரூ.பல லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது,”என்றார்.

**விளைநிலங்களில் தண்ணீர் தேங்குவதால்.வேதனை! அழுகும் தக்காளி; விவசாயிகள் கண்ணீர்**



திருப்பூர்: திருப்பூரில், கடந்த மூன்று நாட்களாக, வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. அவ்வப்போது மழைத்தூறலும், சில நேரங்களில் வெயிலும் அடித்து, வித்தியாசமான சூழல் நிலவுகிறது. விளைநிலங்களில் தேங்கியுள்ள தண்ணீரால், தக்காளி, சின்ன வெங்காயம் அழுகுவதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

தமிழகத்தில், வட கிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. சென்னையில் கொட்டி தீர்த்த மழை, தற்போது, ஊட்டி, குன்னூர், கூடலூர், பந்தலூர் உள்ளிட்ட இடங்களிலும் பெய்து வருகிறது. திருப்பூரில், மூன்று நாட்களாகவே, வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது.

நேற்று முன்தினம் முதல், நேற்று காலை வரை, திருப்பூர், 4.6 மி.மீ.,; அவிநாசி, 1; உடுமலை, 14; பல்லடம், 3; தாராபுரம், 5; காங்கயம், 1.5; மூலனூர், 8.3; மடத்துக்குளம், 16; ஊத்துக்குளி, 1 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. நேற்று, சில இடங்களில் மழைத்தூறல் இருந்தது. நல்லூர், விஜயாபுரம் பகுதிகளில், அரை மணி நேரம் மழை பொழிந்தது. பெரியபாளையம், குளத்துப்பாளையம், கூலிபாளையம், மண்ணரை பகுதிகளிலும் மழை பெய்தது. பழைய பஸ் ஸ்டாண்ட் சுற்றுப்பகுதிகளில், தூறல் மட்டுமே காணப்பட்டது; சில இடங்களில், மழையும் பெய்தது; வெயிலும் நிலவியது. நேற்றைய மழையால், தெருவோர வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்.

**தக்காளி அழுகல்**

பல்லடம் அடுத்த சித்தம்பலம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில், நூறு ஏக்கர் பரப்பளவில், தக்காளி மற்றும் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் சின்ன வெங்காயம் பயிரிட, 50 ஆயிரம் முதல், 70 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. பரவலாக பெய்து வரும் மழையால், விளைநிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதன் காரணமாக, தக்காளி மற்றும் சின்ன வெங்காயம் ஆகியன, அறுவடைக்கு முன்பாக, செடியிலேயே அழுகி வருகின்றன. இதனால், விவசாயிகள் இழப்பை சந்தித்து வருகின்றனர்.

தற்போது தக்காளிக்கு நல்ல விலை கிடைத்து வரும் நிலையில், அவை அழுகி வருவது, அவர்களை வேதனை அடையச் செய்துள்ளது. மழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை, அதிகாரிகள் ஆய்வு செய்து, பயிர் இழப்பீடு வழங்க வேண்டும் என, கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ஏழு ஆண்டுகளுக்கு பிறகு வாதானூர் ஏரி நிரம்பியது

திருக்கனூர்: தொடர்மழை காரணமாக புதுச்சேரியின் மூன்றாவது பெரிய ஏரி ஏழு ஆண்டுகளுக்கு பிறகு தற்போது நிரம்பியுள்ளது.

புதுச்சேரி மாநிலத்தில் ஊசுட்டேரி, பாகூர் அடுத்து, மூன்றாவது பெரிய ஏரி வாதானூர் ஏரி. இந்த ஏரியின் மூலம் பி.எஸ்.பாளையம், சோரப்பட்டு, ஆண்டியார்பாளையம், சோம்பட்டு, வாதானூர் உள்ளிட்ட கிராமங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக, தமிழகப் பகுதிகளில் இருந்து வாதானூர் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக, நேற்று முன்தினம் இரவு ஏரியின் முழு கொள்ளளவு நிரம்பி, தண்ணீர் வெளியேறி வருகிறது. கடந்த 2007ம் ஆண்டு நிரம்பிய வாதானூர் ஏரி, ஏழு ஆண்டுகளுக்கு பிறகு தற்போது கனமழை காரணமாக நிரம்பியுள்ளது. இதனால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதேபோல், தமிழகப் பகுதியான திருமங்கலம் ஏரி 20 ஆண்டுகளுக்கு பிறகு, தற்போது நிரம்பி, தண்ணீர் வெளியேறி வருகிறது.

### வெள்ளத்தால் வெல்லம் உற்பத்தி பாதிப்பு

ஆர்.கே.பேட்டை:கரும்பு தோட்டங்களில் வெள்ளம் தேங்கி, அறுவடை நிறுத்தப்பட்டதாலும், சக்கையை காயவைக்க முடியாததாலும், வெல்லம் தயாரிக்கும் ஆலைகள் மூடப்பட்டு உள்ளன.

ஆர்.கே.பேட்டை சுற்றுப்பகுதியில் அதிகளவில் கரும்பு பயிரிடப்படுகிறது. ராஜாநகரம், ஜனகராஜகுப்பம், ஸ்ரீகிருஷ்ணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில், விவசாயிகள் சொந்தமாக, வெல்லம் தயாரிக்கும் ஆலைகளை வைத்துள்ளனர்.

முதல்கட்ட கரும்பு அறுவடை துவங்கிய நிலையில், 20 நாட்களுக்கு முன்புவரை, வெல்லம் தயாரிக்கும் பணிகள் நடந்தன.தொடர்ந்து கனமழை பெய்ததால், கரும்புத் தோட்டங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால் கரும்பு அறுவடை பாதித்துள்ளது. வெல்லம் தயாரிக்கும் ஆலைகளில் பாகு காய்ச்சுவதற்கு, எரிபொருளாக கரும்பு சக்கையை பயன்படுத்துகின்றனர்.மழையால் கரும்பு சக்கையை காயவைக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. அறுவடையும் பாதித்து, சக்கையை காய வைக்கவும் முடியாததால், வெல்லம் தயாரிப்பு ஆலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

### கவுண்டன்ய மகா நதியில் வெள்ளம்: கலெக்டர் எச்சரிக்கை

வேலூர்: "கவுண்டன்ய மஹா நதி ஆற்றில் வெள்ளம் வருவதால், பொதுமக்கள் அதில் இறங்க வேண்டாம்," என, கலெக்டர் நந்தகோபால் எச்சரிக்கை விடுத்துள்ளார். வேலூர் மாவட்டத்தின் மிகப்பெரிய அணையான மோர்த்தானா அணை, 7 ஆண்டுகளுக்கு பின் நிரம்பியதால், அணையில் இருந்து, 500 கன அடி நீர் உபரியாக வெளியேறி வருகிறது. இதனால் கவுண்டன்ய மஹா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, இந்த நதிக்கரையோரம் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அதிகாரிகள் ஒலிபெருக்கி மூலம் எச்சரித்து வருகின்றனர். மோர்த்தானா அணையில் இருந்து வெளியேறும் தண்ணீர், கவுண்டன்ய மஹா நதி வழியாக, குடியாத்தம் கோபாலபுரம் தரைப்பாலத்தில் செல்கிறது. இதை ஏராளமான பொது மக்கள் பார்த்து குளித்து வருகின்றனர். இந்நிலையில், நதிக்கு தண்ணீர் செல்லும் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டு வருகிறது. இந்த பணிகளை பார்வையிட வந்த கலெக்டர் நந்தகோபால், ஆற்றில் வெள்ளம் அதிகளவு வருவதால் பொதுமக்கள், ஆற்றில் இறங்க வேண்டாம் என, எச்சரிக்கை விடுத்தார்.

### கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம்

மயிலம்: மயிலத்தில் கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம் துவங்கியது.

முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை,சர்வதேச நிதி கழகம், சாலிடாரிடெட் ஆகியவற்றின் சார்பில், திண்டிவனம் கோட்ட கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம் நடந்தது. மயிலத்தில் நடந்த முகாமிற்கு கரும்பு விரிவாக்க மேலாளர் சிவாஜிகணேசன் தலைமை தாங்கினார். கரும்பு அலுவலர் முத்துகுமரன் முன்னிலை வகித்தார். சாலிடாரிடெட் ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் வரவேற்றார்.

இந்தியன் வங்கியின் ஓய்வு பெற்ற அதிகாரி இளங்கோவன் கலந்து கொண்டு, கரும்பு விவசாயிகள் வரவு-செலவு கணக்குகள் பராமரித்தல், வங்கிகள் அளிக்கும் குறுகிய, நீண்ட கால கடன் திட்டங்கள், இவைகளுக்கான வட்டி விகிதம், மேலும் சொட்டு நீர் பாசனம், பராமரிப்புகள் குறித்து விளக்கினார். முகாமில் களப்பணியாளர்கள் முத்துவேல், கோபு, சதீஷ்குமார்,சீனிவாசன், கண்ணன் மற்றும் திண்டிவனம் கோட்டத்தை சேர்ந்த கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### மேல்மலையனூர் பகுதியில் 10 ஏரிகள் நீர் நிரம்பின

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் பகுதியில் பொழிந்த மழையில் 10 ஏரிகள் நிரம்பி வழிகின்றது.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் சில தினங்களாக பொழிந்த மழை அதிகளவில் இல்லாமல் மண்தரை மட்டுமே ஈரமானது. இதை தொடர்ந்து நேற்று முன்தினம் பொழிந்த கன மழையினால் ஆத்திப்பட்டு ஊராட்சியில் சித்தேரி, பெரியஏரி, சோழந்தாங்கலில் இரண்டு ஏரி, கொழப்பலூரில் ஒரு ஏரி ஆக ஐந்து ஏரிகள் நிரம்பி வழிந்தன.

இதே போல், வடவெட்டி ஊராட்சியில் சொக்கப்பள்ளம், அம்மேரி ஏரிகள் நிரம்பியது. மானந்தல் ஏரி, அன்னப்பள்ளம் , கணபதி புரம் ஏரிகள் நிரம்பியது. கணபதி புரத்தில் பலகீனமான ஏரிக்கரையை கிராம மக்கள் மண் மூட்டைகளை கொண்டு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டனர். வடவெட்டி ஊராட்சி கீழ்செவலாம்பாடி- மேல்காரணி கிராமங்களுக்கு செல்லும் வழியில் உள்ள தரைப்பாலத்தின் மீது 5 அடிக்கும் மேலாக மழை வெள்ளம் செல்கிறது. இதனால் இப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

## மேல்மலையனூர் பகுதியில் 10 ஏரிகள் நீர் நிரம்பின

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் பகுதியில் பொழிந்த மழையில் 10 ஏரிகள் நிரம்பி வழிகின்றது.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் சில தினங்களாக பொழிந்த மழை அதிகளவில் இல்லாமல் மண்தரை மட்டுமே ஈரமானது. இதை தொடர்ந்து நேற்று முன்தினம் பொழிந்த கன மழையினால் ஆத்திப்பட்டு ஊராட்சியில் சித்தேரி, பெரியஏரி, சோழந்தாங்கலில் இரண்டு ஏரி, கொழப்பலூரில் ஒரு ஏரி ஆக ஐந்து ஏரிகள் நிரம்பி வழிந்தன.

இதே போல், வடவெட்டி ஊராட்சியில் சொக்கப்பள்ளம், அம்மேரி ஏரிகள் நிரம்பியது. மானந்தல் ஏரி, அன்னப்பள்ளம் , கணபதி புரம் ஏரிகள் நிரம்பியது. கணபதி புரத்தில் பலகீனமான ஏரிக்கரையை கிராம மக்கள் மண் மூட்டைகளை கொண்டு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டனர்.

வடவெட்டி ஊராட்சி கீழ்செவலாம்பாடி- மேல்காரணி கிராமங்களுக்கு செல்லும் வழியில் உள்ள தரைப்பாலத்தின் மீது 5 அடிக்கும் மேலாக மழை வெள்ளம் செல்கிறது. இதனால் இப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

## கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம்

மயிலம்: மயிலத்தில் கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம் துவங்கியது.

முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை,சர்வதேச நிதி கழகம், சாலிடாரிடெட் ஆகியவற்றின் சார்பில், திண்டிவனம் கோட்ட கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம் நடந்தது. மயிலத்தில் நடந்த முகாமிற்கு கரும்பு விரிவாக்க மேலாளர் சிவாஜிகணேசன் தலைமை தாங்கினார். கரும்பு அலுவலர் முத்துகுமரன் முன்னிலை வகித்தார். சாலிடாரிடெட் ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் வரவேற்றார்.

இந்தியன் வங்கியின் ஓய்வு பெற்ற அதிகாரி இளங்கோவன் கலந்து கொண்டு, கரும்பு விவசாயிகள் வரவு-செலவு கணக்குகள் பராமரித்தல், வங்கிகள் அளிக்கும் குறுகிய, நீண்ட கால கடன் திட்டங்கள், இவைகளுக்கான வட்டி விகிதம், மேலும் சொட்டு நீர் பாசனம், பராமரிப்புகள் குறித்து விளக்கினார்.

முகாமில் களப்பணியாளர்கள் முத்துவேல், கோபு, சதீஷ்குமார்,சீனிவாசன், கண்ணன் மற்றும் திண்டிவனம் கோட்டத்தை சேர்ந்த கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## மணிமுக்தா அணையில் 3,000 கன அடி நீர் வெளியேற்றம்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி மணிமுக்தா அணையிலிருந்து, நேற்று வினாடிக்கு 3,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. சுற்று வட்டார கிராம பொது மக்கள் ஆர்வமுடன் பார்த்து மகிழ்கின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. கள்ளக்குறிச்சி அடுத்த கல்வராயன்மலையில் பெய் யும் மழை நீர் முழுவதும் கல்படை, பொட்டியம், மல்லிகைபாடி, மணி, முக்தா ஆகிய ஆறுகள் வழியாக கோமுகி, மணிமுக்தா அணைகளுக்கு வருகின்றன. இதனால் மணிமுக்தா மற்றும் கோமுகி அணையில் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. இதனால் மேற்கொண்டு வரும் வரத்து நீர் முழுவதும் உடனுக்குடன் வெளியேற்றப்படுகிறது.

மணிமுக்தா அணையின் மொத்த கொள்ளவான 36 அடியில்(736 மில்லியன் கன அடி), 34 அடிக்கு (590 மில்லியன் கன அடி) மட்டுமே நீர் இருப்பு வைக்க முடியும். அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்தால், மேற்கொண்டு வரும் நீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது. நேற்று முன் தினம் மதியம் 2,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்று இரண்டாவது நாளாக காலை முதல் 3,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன. இதனால் மணிமுக்தா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரையோர கிராம பொதுமக்களுக்கு வெள்ள் எச்சரிக்கை விடப்பட்டது.

மேலும் ஆற்றிலுள்ள அனைத்து தடுப்பணைகளும் நிரம்பி வழிந்தோடுவதால், ஏரிகளுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளுக்கு பின், மணிமுக்தா அணையிலிருந்து ஆறு வழியாக அதிகளவில் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருவதால், சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள், தங்களது குடும்பத்தினருடன் அணைக்கு வந்து கண்டு மகிழ்கின்றனர். தொடர் மழையால் அணையின் ஊழியர்கள் மற்றும் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## மாவட்டத்தில் 22ம் தேதி வரை சராசரியாக 475 மி.மீ., மழை பதிவு

விழுப்புரம்: மாவட்டத்தில் கடந்த 1ம் தேதி முதல் 22ம் தேதி வரை சராசரியாக 475.10 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 832 ஏரிகளில் 437 ஏரிகள் நூறு சதவீதம் நிரம்பியது.

மேலும் 233 ஏரிகள் 75 சதவீதமும், 103 ஏரிகள் 50 சதவீதமும், 59 ஏரிகள் 50 சதவீதத்திற்கு கீழ் தண்ணீர் நிரம்பியுள்ளது. இதேபோல் மா◌ாவட்டத்தில் 92 மாடுகள் மற்றும் 44 ஆடுகள் தொடர் மழையால் இறந்துள்ளன. மே<<லும், கடந்த 22ம் தேதி வரை 480 வீடுகள் முழுமையாகவும், 3,942 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளது.

இம்மாதம் 1ம் தேதி முதல் 22ம் தேதி வரை மரக்காணத்தில் 704 மி.மீ., மழையும், விழுப்புரத்தில் 663.30 மி.மீ.,- திருக்கோவிலூரில் 532.50 மி.மீ.,- வானூரில் 498.50 மி.மீ.,-செஞ்சியில் 480 மி.மீ.,- திண்டிவனத்தில் 428.10 மி.மீ.,- சங்கராபுரத்தில் 338 மி.மீ.,- <உளுந்தூர்பேட்டையில் 324 மி.மீ.,- கள்ளக்குறிச்சியில் 307.50 மி.மீ., என சராசரியாக 475.10 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் மரக்காணத்தில் அதிகட்சமாகவும், கள்ளக்குறிச்சியில் குறைந்தபட்சமாகவும் மழை பெய்துள்ளது.

### மழை வெள்ளத்தால் கோழிகள் பரிதாப பலி

விழுப்புரம்: விழுப்புரத்தில் ஏரி தண்ணீர் கோழிப்பண்ணையில் புகுந்ததில் 3,500 கோழிகள் இறந்தன.

விழுப்புரம் மகாராஜபுரம் பகுதியை சேர்ந்தவர் ராஜா, 45; இவர் அதே பகுதியில் உள்ள ஆர்.மகாராஜபுரம் பகுதியில் கோழிப்பண்ணை வைத்துள்ளார். இந்த பண்ணைக்கு அருகில் 50 மீட்டர் துாரத்தில் ஏரி அமைந்துள்ளது. நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால், ஏரியில் இருந்து வெளியேறி தண்ணீர், கோழி பண்ணைக்குள் புகுந்தது. இதில், 3,500 கோழிகள், தண்ணீரில் மூழ்கி இறந்துள்ளது. தகவலறிந்த வருவாய்த்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டனர்.

### ராகவன் வாய்க்காலில் உடைப்பு நெல், உளுந்து பயிர்கள் மூழ்கியது

திருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர் அருகே ராகவன் வாய்க் காலில் உடைப்பு ஏற்பட்டதால், மழை வெள்ளத்தில் நெல், உளுந்து பயிர்கள் மூழ்கியது.

திருக்கோவிலூர் அணைக் கட்டிலிருந்து ராகவன் வாய்க்கால் பிரிந்து பல்வேறு ஊர்களின் வழியே கடலூர் மாவட்டத்திலுள்ள கெடிலம் ஆற்றில் கலக்கிறது. இந்த வாய்க்கால் மூலம் பல்வேறு கிராம ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுசெல்லப்படுகிறது. கடந்த சில தினங்களாக கனமழை பெய்ததால் வாய்க்காலில் அதிகளவில் நீர்வரத்து ஏற்பட்டது. இந்நிலையில் நேற்று காலை 10:00 மணிக்கு, திருவெண்ணெய்நல்லூர் அடுத்த அனைவாரி ரயில்வே கேட் பகுதியிலுள்ள ராகவன் வாய்க்காலில் திடீர் உடைப்பு ஏற்பட்டது. மழை நீர் பழையபட்டினம் பகுதியிலுள்ள வயலு<க்கு சென்றதால், பல ஏக்கர் பரப்பளவில் நெல், உளுந்து பயிர்கள் தண்ணீரில் மூழ்கியது. தகவலறிந்த பொதுப்பணித்துறை அதிகாரிகள், உதவி திட்ட அலுவலர் சம்பத்குமார், பி.டி. ஓ.,க்கள் கலியவரதன், தாமோதரன் ஆகியோர் வாய்க்கால் உடைப்பை பார்வையிட்டு, சரி செய்யும் பணியை மேற்கொண்டனர்.

### மேட்டூர் கால்வாய் நீர் திறப்பு குறைப்பு

மேட்டூர்: மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசன நீர்திறப்பு வினாடிக்கு, 160 கனஅடியாக குறைக்கப்பட்டது. சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில், 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சம்பா சாகுபடி மேற்கொள்வதற்காக, மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்கு கால்வாயில், ஆக., 20ம் தேதி பாசனத்துக்கு நீர் திறக்கப்பட்டது. பாசன பகுதிகளில், வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் கடந்த, 5ம் தேதி கால்வாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. கடைமடை பகுதியில் மழை தீவிரம் குறைந்ததால், கடந்த, 18ம் தேதி கால்வாயில் வினாடிக்கு, 400 கன அடி நீர் திறந்த நிலையில், மீண்டும் மழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால், மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாய் நீர் திறப்பு நேற்று வினாடிக்கு, 160 கன அடியாக குறைக்கப்பட்டது.

## மல்லசமுத்திரத்தில் கனமழை: ஏரி நிரம்பியதால் மகிழ்ச்சி

மல்லசமுத்திரம்: மல்லசமுத்திரம் பகுதியில் கனமழை பெய்து வருவதால், மதியம்பட்டி ஏரி நிரம்பி கடல் போல் காட்சி அளிக்கிறது. அதனால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல் அடுத்த, மல்லசமுத்திரம் யூனியன், மதியம்பட்டியில், 45 ஏக்கர் பரப்பளவில், பெரிய ஏரி அமைந்துள்ளது. அதன் அருகில், 40 ஏக்கர் பரப்பளவில் பூலக்குட்டை ஏரியும் அமைந்துள்ளது. மழைக்காலங்களில், சேலம் மாவட்டம், திருமணிமுத்தாறில் இருந்து, மாமுண்டி அருகே பிரிந்து இந்த ஏரிகளுக்கு தண்ணீர் வந்தடைகிறது. இந்த ஏரியை சுற்றிலும், 300 ஏக்கர் விளை நிலங்கள பாசன வசதி பெறுகிறது. சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாய கிணறுகளில் நீர் உயர்வதுடன், நிலத்திடி நீர்மட்டமும் உயர்கிறது. அதன் மூலம், விவசாயத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடின்றி பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. மதியம்பட்டி பெரிய ஏரி மூலம், பொரசல்பட்டி, மதியம்பட்டி கிராமமும், பூலக்குட்டை சின்ன ஏரி மூலம், சவுரிபாளையம், கல்கட்டானூர் ஆகிய கிராமங்களும் பாசன வசதி பெறுகின்றன. இப்பகுதியில், நெல், பருத்தி, கரும்பு, வாழை, தென்னை, சோளம், மக்காச்சோளம், நிலக்கடலை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஒரு மாதமாக, தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. நாமக்கல் மாவட்டம் முழுவதும் கனமழை பெய்து வருவதால், ஏரி, குளம், குட்டைகள் நிரம்பி வருகிறது. அதன்படி, இந்த மதியம்பட்டி பெரிய ஏரியும், பூலக்குட்டை ஏரியும் நிரம்பி உள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை ஏரிகள் நிரம்புவது வழக்கம். இந்த ஆண்டு, அதிக அளவில் தண்ணீர் வந்ததால், ஏரி விரைவாக நிரம்பி கடல்போல் காட்சி அளிக்கிறது. இது விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## மாவட்டம் முழுவதும் 13.43 மி.மீ., மழைபதிவு

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில், கடந்த ஒரு மாதமாக மழை பெய்து வருகிறது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், குளம், குட்டை, ஏரி, கிணறு, ஆழ்துளை கிணறு ஆகிய நீர் ஆதாரங்களில், நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம், காலை, 6 மணி முதல், நேற்று காலை, 8 மணி வரை, மாவட்டத்தில் மழை பெய்தது. அதன் விவரம்: அதிக பட்சமாக, மங்களபுரத்தில், 28.2 மி.மீ., மழை பதிவானது. எருமப்பட்டி, 10, குமாரபாளையம், 8.6,

மங்களபுரம், 28.2, மோகனூர், 17, நாமக்கல், 12, ப.வேலூர், 9, புதுச்சத்திரம், 3, ராசிபுரம், 21.3, சேந்தமங்கலம், 15, திருச்செங்கோடு, 10.2 என, மொத்தம், 134.3 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. அவற்றின் சராசரி, 13.43 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

### தொடர் மழை: ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 15வது நாளாக நீடிக்கும் தொடர் மழையால், வறண்டு கிடந்த ஏரிகளுக்கு தண்ணீர் வந்து கொண்டிருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த, 9 ம் தேதி முதல், தொடர் மழை பெய்து வருகிறது. மாவட்டம் முழுவதும் நேற்றும், 15 வது நாளாக தொடர்ந்து மழை பெய்தது. இதனால், பள்ளிகளுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது. நேற்று காலை நிலவரப்படி, மாவட்டத்தில் அதிபட்சமாக, ஊத்தங்கரை, 32 மி.மீ.,, பெணுகொன்டாபுரம், 31.30, ராயக்கோட்டை, 24, தளி, 20, பாரூர், 19.40, நெடுங்கல், 19, கிருஷ்ணகிரி, 17.40, தேன்கனிக்கோட்டை, 13, போச்சம்பள்ளி, 11.4, அஞ்செட்டி, 10, சூளகிரி, 8, ஓசூர், 4 மி.மீ., என, மாவட்டம் முழுவதும் மொத்தம், 209.5 மி.மீட்டர் மழை பதிவானது. தொடர் மழையால், கிருஷ்ணகிரி அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவும் அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, கிருஷ்ணகிரி அணைக்கு, வினாடிக்கு, 1,258 கன அடி தண்ணீர் வந்தது. அணையின் பாதுகாப்பு கருதி, அணையில் இருந்து, 1,411 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர்மட்டம், 52 அடியாகும். தற்போது அணையின் நீர்மட்டம் 51.65 அடியாக உள்ளது. மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால், 10 வருடங்களுக்கு மேலாக வறண்டு கிடந்த பெரும்பாலான ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் சாய்ந்து நாசம்

டி.என்.பாளையம்: டி.என்.பாளையம் ஒன்றியம், நன்செய் புளியம்பட்டி ஊராட்சி பகுதியில், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில், 45 ரக நெல், குண்டு இட்லி ரக நெல் சாகுபடி செய்யப்பட்டன. இதில், 500க்கும் மேற்பட்ட ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிர் தற்போது அறுவடைக்கு வந்துள்ளன. அடுத்த, 15 நாட்களில் அறுவடை செய்வதற்கு விவசாயிகள் தயாராக இருந்தனர். இந்நிலையில், டி.என்.பாளையம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால், நெல் வயல்களில் நீர் தேங்கியது. விவசாயிகள் நீரை வெளியேற்ற வயல் ஓரங்களில் தனி வடிகால் அமைத்து வெளியேற்றினர். தினமும் விட்டு விட்டு மழை பெய்ததால் பயிர் அழுகி தண்டுப்பகுதி வலுவிழந்து கதிர்களை தாங்கிநிற்க முடியாமல் சாய்ந்து விட்டன. இதனால், நெல் வயல்களில் சேதமடைந்த பகுதி அதிகமாக தென்படுகிறது. நெல் நடவு செய்த நாளில் இருந்து மழை பெய்ததால், சுருட்டைப்புழுவால் நெற்பயிர் பாதிக்கப்பட்டதால், 3 தடவை நோய் தடுப்பு மருந்து தெளிக்கப்பட்டது. இதனால் மகசூலும்

பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து, விவசாயி சுப்பிரமணி கூறியதாவது: இந்தாண்டு நெல்லில் போதிய லாபம் கிடைக்காது. மழையால் உற்பத்தி செலவு அதிகமாகிவிட்டது.அதே நேரத்தில் மகசூலும் குறையும். தற்போது மழையால் பெரும்பகுதி நெற்பயிர்கள் சாயந்துவிட்டன. சில நாட்களில் அவற்றில் முளைப்பு வந்துவிடும். இனிமேலும் மழை தொடர்ந்தால் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் நெற்பயிர்கள் மேலும் பாதிக்கப்படும். நெற்பயிரை அறுவடை செய்தாலும் ஈரத்தன்மையுள்ள புல்லும் விற்பனையாகாது. இவ்வாறு அவர் கூறினார்.

### கேரளாவை கலக்கும் பாடவள்ளி கிழங்கு தமிழக பழங்குடி பெண்கள் வினியோகம்

பந்தலுார்: கூடலுார், பந்தலுார் பகுதி வனங்களில் விளையும் பாடவள்ளி கிழங்கு, கேரளாவில் ஆயுர்வேத மருந்து தயாரிக்க, பழங்குடியின பெண்களால் விற்பனை செய்யப்படுகிறது.

நீலகிரி மாவட்டம், கூடலுார் வனக்கோட்டத்துக்கு உட்பட்ட வனப்பகுதிகளில், பல்வேறு வகை மூலிகை செடிகள், கிழங்கு வகைகள் காணப்படுகின்றன. இவற்றை பழங்குடியின மக்கள், கேரள ஆயுர்வேத மருந்துக்கடைகளில் விற்பனை செய்கின்றனர்.

இதில், பாடவள்ளி கிழங்கு முக்கியமானது. பழங்குடியின பெண்கள் இவற்றை தோண்டி எடுத்து, பச்சையாக விற்பனை செய்தால் கிலோவுக்கு, 100 ரூபாயும், வெட்டி துண்டுகளாக்கி, காய வைத்து விற்பனை செய்தால் கிலோவுக்கு, 350 முதல், 400 ரூபாய் வரையும் பெறுகின்றனர். இதன் வாயிலாக சிறந்த வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

வயிற்று வலி, விந்து உற்பத்தி, குழந்தைப் பேறு மருந்து தயாரிக்க, இந்த கிழங்கு முக்கிய மூலப்பொருளாக பயன்படுவதாக, மருத்துவர்கள் கூறுகின்றனர்.

### மழையால் பாதிப்பு

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியில் கடந்த சில நாட்களாக கனமழைப் பெய்துவருகிறது. நேற்று முன்தினம் இரவு முழுவதும் கனமழை கொட்டியது. இதில், கோத்தகிரி- சோலுார்மட்டம் சாலையில், ஆவுக்கல் பகுதியில்,நேற்று அதிகாலை, மரம் விழுந்தது.

எஸ்டேட் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மரத்தை அகற்றினர். இதனால், அவ்வழித்தடத்தில், ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கோத்தகிரி ராம்சந்த் பகுதியில், கூட்டுறவு பால் நுகர்வோர் சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் இருந்த கட்டடத்தின் பின்புறம் இடிந்தது.

### பருவமழையால் வாழையில் நோய் தாக்கம்: நுட்பங்களை கடைபிடிக்க வேண்டுகோள்

கரூர்: மழை, பணிகாலங்களிலும் பனாமா வடல் நோய், இலைப்புள்ளி நோய் வரக்கூடும் என்பதால், மழை வெள்ளத்திலிருந்து பயிரை பாதுகாத்து அதிக மகசூல் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கலெக்டர் ஜெயந்தி வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்டத்தில் மொத்த சாகுபடி பரப்பு, 61 ஆயிரத்து, 992 ஹெக்டேரில், 15 ஆயிரத்து, 471 ஹெக்டேரில், தோட்டக்கலைப்பயிர்களான பழப்பயிர், காய்கறிப்பயிர், வாசனை திரவியப்பயிர், மலர்கள், மருத்துவபயிர்கள் ஆகிய ரக பயிர் செய்யப்படுகிறது.

3,000 ஹெக்டேரில் வாழை: இதில், கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை மற்றும் தோகமலை வட்டாரங்களில், 3,000 ஹெக்டேர் பரப்பில் பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, நெய்பூவன் போன்ற ரக வாழை சாகுபடி செய்யப்படுகிறது. காவிரி டெல்டா பகுதிகளில் படுகை நிலங்களில் கிடங்கு வெட்டி வாழை சாகுபடி செய்யப்படுகிறது.

தண்ணீர் தேக்கம்: வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருவதால் காவிரி மற்றும் அமராவதி ஆற்றுப்பகுதிகளில் அதிக அளவில் நீர் வரத்து உள்ளது. கால்வாய்களில் நீர் அதிக அளவில் செல்வதாலும் நீர் நிலைகளில் நீர் மட்டம் உயருவதாலும் வாழை சாகுபடி செய்துள்ள வயல்களில் தண்ணீர் புகுந்து நீர் தேங்கும் நிலை உள்ளது. தற்போது, 4, 5 மாதம் வயதுடைய பயிர் முதல் குலை தள்ளிய பயிர் வரை காணப்படுகின்றது. பருவமழை மற்றும் இயற்கை சீற்றத்தில் இருந்து வாழை பயிரை பாதுகாக்க விவசாயிகள் சில தொழில் நுட்பங்களை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் மழைகாலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வாழை கிடங்கினை நன்குசீவி, அகலப்படுத்தி மழை நீரை எளிதில் வடிய விட வேண்டும்.

பராமரிப்பு தேவை: அதிகமாக மழை பொழியும் நேரங்களில் நிலம் ஈரமாக இருப்பதாலும் மிதமான முதல் வேகமான காற்று வீசுவதால் வாழை சேதம் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, இதை தவிர்க்க குலை தள்ளிய வாழைக்கு மூங்கில் கழிகள் கொண்டு நன்கு கட்டி முட்டு கொடுத்து பராமரிக்க வேண்டும். வாழை பயிரை கூன்வண்டு தாக்குதலில் இருந்து பாதுகாக்க காய்ந்த சருகுகளை நீக்கி வயலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மழைக்காலங்களில் கூன்வண்டுகள் மழைநீரின் மூலம் அடித்து வரப்பட்டு நன்கு இருக்கும் வாழை வயலை தாக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. மருந்து தெளிப்பதன் மூலம் வாழைப்பயிரினை கூன்வண்டு தாக்கதவாறு பாதுகாக்கலாம். மழை, பனிகாலங்களிலும் பனாமா வடல் நோய், இலைப்புள்ளி நோய் வரக்கூடும். மழை வெள்ளத்திலிருந்து பயிரை பாதுகாத்து அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தொடர்மழையால் நீர்மட்டம் உயர்வு: மொஞ்சனூர் விவசாயிகள் மகிழ்ச்சி

க.பரமத்தி: க.பரமத்தி யூனியன், மொஞ்சனூர் பஞ்சாயத்தில் உள்ள குளங்கள் மற்றும் நீர் நிலைகள், வடகிழக்கு பருவமழையால் நிரம்பியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கரூர் அடுத்த, மொஞ்சனூர் பஞ்சாயத்தில், விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக தொட்டிபட்டி, மொஞ்சனூர், பசுபதிபாளையம் உள்ளிட்ட பகுதியில், விவசாயத்துறை மூலமாகவும், அண்ணா

மறுமலர்ச்சி திட்டத்தில் ஒரு குளமும் அமைக்கப்பட்டது. மழைக்காலங்களில் பெய்த மழையால், கடந்த, பத்து ஆண்டாக எந்த குளமும் நிரம்பவில்லை. இருப்பினும், சேமித்த நீர் மூலம் விவசாய கிணறுகளின் நீர் மட்டம் ஓரளவு உயர்ந்து வந்தது. இந்தாண்டு தொடர்ந்து பெய்த வடகிழக்கு பருவ மழையால், அப்பகுதியில் உள்ள குளங்கள் மற்றும் நீர்நிலைகள் அனைத்தும் நிரம்பியுள்ளது. இதனால், இந்தாண்டு குறுவை நெல் சாகுபடி, 2,000 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி மும்முரமாக நடப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### பயிர்கள் முழ்கின

தேனி:வைகை அணையின் நீர் பிடிப்பு பகுதி 24 சதுர கிலோ மீட்டர் ஆகும். அணையின் பின்பகுதியில் இருந்து குன்னூர் வரை நீர் பிடிப்பு பகுதிகள் உள்ளது. அணையின் ஆற்று புறம்போக்கு நிலமாக பல நூறு ஏக்கர் விளை நிலங்கள் உள்ளது. இப்பகுதியை ஒட்டி உள்ள அரப்படித்தேவன்பட்டி, குன்னூர், சொக்கத்தேவன்பட்டி, பின்னத்தேவன்பட்டி ஆகிய கிராமங்களில் வசிக்கும் சில விவசாயிகள் ஆண்டுக்கு 8 மாதம் வரை ஆக்கிரமிப்பு செய்து பயறு வகைகள், கரும்பு, நெல் சாகுபடி செய்து வருகிறார்கள். தற்போது வைகை அணை நீர் மட்டம் உயர்ந்து வருவதால் ஆற்றோர ஆக்கிரமிப்பு நிலங்களில் சாகுபடி செய்துள்ள பயிர்கள் நீரில் முழ்கி உள்ளது.

### சொட்டு நீர் பாசன வசதிக்குரூ.7.81 கோடி நிதி ஒதுக்கீடு

தேனி:தேனி மாவட்டத்தில் தோட்டக்கலை சார்பில், சொட்டு நீர் பாசன திட்டம் செயல்படுத்த பொது விவசாயிகளுக்கு ரூ.631.94 லட்சமும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.150 லட்சமுமாக மொத்தம் ரூ. 781.94 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் சிறு,குறு விவசாயிகளுக்கு மத்திய அரசு 35 சதவீதமும், மாநில அரசு 65 சதவீதமும் நிதி உதவி வழங்குகிறது. இதர விவசாயிகளுக்கு மத்திய அரசு 25 சதவீதமும், மாநில அரசு 50 சதவீத நிதி வழங்குகிறது.குறைந்த இடைவெளியுள்ள பயிர்களுக்கு எக்டேருக்கு ரூ.60 ஆயிரம் முதல் ரூ.80 ஆயிரம் வரையும், அதிக இடைவெளி உள்ள பயிர்களுக்கு ரூ.20 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை சொட்டு நீர் பாசனம் அமைத்திட மானியம் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி, விவசாயிகள் தங்களது போட்டோ, நிலத்தின் சிட்டா, அடங்கல், நில வரைபடம் ஆகியவற்றுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களை தொடர்பு கொண்டு, விண்ணப்பித்து பயன்பெறுமாறு கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

### தேனி மாவட்டத்தில் இதுவரை252.53 மி.மீட்டர் மழை பதிவு

தேனி:வடகிழக்கு பருவமழை, கடந்த 2 ஆண்டை விட இந்த ஆண்டு தேனியில் அதிகளவு பெய்துள்ளது.தேனி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் வரை வடகிழக்கு பருவமழை 382.4 மி.மீட்டர் அளவிற்கு பெய்யும். ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக போதிய அளவு மழை

இல்லை. 2013 ல் நவம்பரில் வடகிழக்கு பருவமழை தேனி மாவட்டத்தில் 75.42 மி.மீ., மட்டுமே பெய்தது. இது 2012ம் ஆண்டை விட 11.62 மி.மீ., குறைவு. இதனால் மாவட்டத்தில் பல பகுதிகளில் கோடையில் வறட்சி ஏற்பட்டது. 2014 நவம்பரில் வடகிழக்கு பருவமழை 81.31 மி.மீ., அளவில் பதிவானது. இந்த ஆண்டு நேற்று வரை 252.53 மி.மீ.,மழை பதிவாகியுள்ளது. கடந்த 2 ஆண்டுகளை விட இந்த ஆண்டுதான் அதிகளவில் பெய்துள்ளது.

இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இம்மழையால் மஞ்சளாறு, சோத்துப்பாறை, சண்முகநதி அணைகள் நிரம்பி உள்ளது.

### ராமநாதபுரம் கடற்கரையில்விளையுது குடைமிளகாய்

ராமநாதபுரம்:ராமநாபுரம் சுந்தரமுடையான் கடற் கரை பகுதியில் குடைமிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. குடைமிளகாய் குளிர் பிரதேஷங் களில் விளையும் பயிர். இதனை முதல் முயற்சியாக வெப்பம் மிகுந்த ராமநாத புரத்தில் பயிரிட்டுள்ளனர். இவை கடற்கரை பகுதியான சுந்தரமுடையான் ஊரக வளர்ச்சி முகமையின் தோட்டக் கலை பண்ணையில் ஆயிரம் சதுர மீட்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குளிர் சீதோஷ்ண நிலையை உருவாக்க பாலிஹவுஸ் அமைக்கப்பட்டுள்ளது.

சொட்டுநீர் பாசன முறையில் தண்ணீர் விடப்படுகிறது. தற்போது செடிகளில் "மெகா சைசில்' குடைமிளகாய்கள் காய்த்துள்ளன. கடற்கரை மணற் பாங்கான பகுதியில் குடைமிளகாய் விளைந்துள்ளதை அப்பகுதி விவசாயிகள் ஆச்சரியத்துடன் பார்த்து வருகின்றனர்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் நாகராஜன் கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டதிலேயே முதன்முறையாக இங்கு தான் பாலிஹவுஸ் அமைக்கப் பட்டுள்ளது. குடைமிளகாயை சாதாரணமாக பயிரிட்டால் விளையாது. பாலிஹவுசில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம். குடைமிளகாய் 5 மாதங்களில் விளைச்சலுக்கு வரும். ஆயிரம் சதுர மீட்டரில் 20 டன் கிடைக்கும். ஒரு கிலோ ரூ.20 க்கு விற்கலாம். இதன்மூலம் ரூ.3 லட்சம் வரை லாபம் கிடைக்கும். தோட்டக்கலைத்துறை மூலம் மானியத்தில் பாலிஹவுஸ் அமைத்து தரப்படும், என்றார்.

### தேசிய வேளாண் காப்பீடு திட்டம்:டிச., 15 வரை பிரிமீயம் செலுத்தலாம்

ராமநாதபுரம்:தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகள் டிச., 15 வரை பிரிமீயம் செலுத்தலாம் என, ராமநாத புரம் வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார்.அவர் கூறியதாவது: தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் நெல் போன்ற அனைத்து வகை உணவு பயிர்கள், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள், தோட்ட பயிர்கள் ஆகியவற்றை இன்சூரன்ஸ் செய்யலாம். வெள்ளம், வறட்சி, பூச்சிகள், நோய்கள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். குத்தகைகாரர் உட்பட அனைத்து விவசாயிகளும் இன்சூரன்ஸ் செய்யலாம்.கடன் பெறாதோர்: நெல் பயிருக்கு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகள் ரூ.134

ம், இதர விவசாயிகள் ரூ.149 ம் பிரிமீயமாக டிச., 15 க்குள் செலுத்த வேண்டும். கூடுதல் பிரிமீயமாக ஏக்கருக்கு ரூ.3,133 செலுத்தலாம். கடன் பெறுவோர்: நெல் பயிருக்கு ஏக்கருக்கு அனைத்து விவசாயிகளும் ரூ.149 ம் பிரிமீயமாக டிச., 31 க்குள் செலுத்த வேண்டும். கூடுதல் பிரிமீயமாக ஏக்கருக்கு ரூ.3,148 செலுத்தலாம். இன்சூரன்ஸ் குறித்த விபரங்கள், விண்ணப்பங் களை அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங் களில் பெற்று கொள்ளலாம். பிரிமீயத் தொகையை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய வங்கிகளில் செலுத்தலாம், என்றார்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் இலவச பயிற்சிகள்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையத்தில் இலவச பயிற்சிகள் நடக்க உள்ளன.நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால் கூறியதாவது: ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நவ., 27 ல் பாலில் மதிப்பூட்டப்பட்ட உணவுகள் குறித்த இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோல் நவ., 30 ல் சிறுதானியங்களில் மதிப்பூட்டப்பட்ட உணவுகள் குறித்த பயிற்சி அளிக்கப்படும் இந்த பயிற்சியில் விவசாயிகள், பெண்கள், தொழில் முனைவோர் பங்கேற்கலாம். விரும்புவோர் திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், கடலோர உவர் ஆராய்ச்சி மையம், ராமநாதபுரம், தொலைபேசி எண்: 04567 230250 ல் தொடர்பு கொண்டு தங்களது பெயரை பதிவு செய்ய வேண்டும் என்றார்.

## மழையால் தண்ணீர் வரத்து: மகிழ்ச்சியில் மக்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர்: மழையால் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் செண்பகதோப்பு, திருமுக்குளம் மற்றும் பல கண்மாய்களுக்கு தண்ணீர் வரத்து ஏற்பட்டுள்ளதால், செண்பகதோப்பு பேச்சியம்மன்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் குவியத்துவங்கினர். பேயனாற்று ஓடையில் அதிக நீர்வரத்து இருப்பதால் பொதுமக்கள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். அதிரடிப்படை போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இருந்தபோதிலும் பேச்சியம்மன் கோயிலுக்கு சுவாமி கும்பிட ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர் நகரிலுள்ள திருமுக்குளத்திற்கு சில ஆண்டிற்கு பிறகு தண்ணீர் வந்துள்ளதால் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இதேபோல் மம்சாபுரத்திலிருந்து செண்பகதோப்பு செல்லும் வழியில் உள்ள கண்மாய்கள் நிரம்பி உள்ளதால், அப்பகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி நீர்நிலைகளை வனத்துறை, காவல், வருவாய்த்துறையினர் தீவிரமாக கண்காணிக்கின்றனர்.

## மழை நிவாரண உதவிஅமைச்சர் வழங்கினார்

விருதுநகர்:திருத்தங்கல் நகராட்சியில் மழையில் சேதமடைந்த 15 குடிசை வீடுகளுக்கு நிவாரண உதவியை அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி வழங்கினார்.திருத்தங்கலில் மழையில் பாதி சேதமடைந்த 12 வீடுகளுக்கு தலா 4,100 ரூபாய் வீதம் 12 பேருக்கு 49,200 ரூபாய் வீதம், முழுமையாக

சேதமடைந்த 3 வீடுகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் 15 ஆயிரம், தலா 10 கிலோ அரிசிம், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், வேட்டி, சேலைகளை வழங்கினார்.

அவர் கூறுகையில், ""மழையால் பாதித்தவர்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகளை தாமதமின்றி அரசு செய்கிறது," என்றார். திருத்தங்கல் நகராட்சி துணை தலைவர் சக்திவேல், மாவட்ட கவுன்சிலர் கருப்பசாமி, தாசில்தார் அய்யாக்குட்டி உட்பட பலர் பங்கேற்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**புழு தாக்குதலால் பருத்தி விவசாயம் பாதிப்பு**


ஆத்தூர், கெங்கவல்லி பகுதிகளில் பருத்தியில் புழுக்கள் தாக்குதலால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 60 ஆயிரம் ஏக்கரில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. கடந்த வாரம் பெய்த மழையின் காரணமாக பருத்தி செடிகளில் நோய் தாக்குதல் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. இதை, ஆத்தூர் ஒருங்கிணைந்த முற்போக்கு விவசாயிகள் சங்கத் தலைவர் அக்ரி அ.சண்முகவேல் மூர்த்தி, செயலர் பி.முருகன், சாத்தப்பாடி மணி, கூடமலை சுப்பிரமணி, மருந்து நிறுவன மேலாளர் வினோத்குமார் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

இதில் பருத்தியில் புருடினியா புழு, வாடல் நோய் தாக்குதலால் சப்பை, பூ, காய் உதிர்தல் ஆகிய பாதிப்புகள் அதிக அளவில் காணப்படுவது தெரியவந்தது.

இந்தப் பகுதிகளில் நீண்டகால வறட்சி, திடீர் மழை, அதிக ஈரப்பதம் காரணமாக பருத்தியில் வாடல் நோய்த் தாக்குதல் சப்பை உதிர்வதற்கு மிக முக்கியமான காரணமாகக் கூறப்படுகிறது. பி.டி. ரக பருத்தியிலும் புழுவின் தாக்கம் சில பகுதிகளில் காணப்படுகிறது. பருத்தி ஆராய்ச்சி நிலையம் புழு தாக்குதலுக்கு காரணமாக, வெயில் இல்லாமல் அதிக ஈரப்பதம் கொண்ட கால நிலை, முறையற்ற கலை மேலாண்மை, ஆமணக்கு, துவரை, நிலக்கடலை, மஞ்சள் ஆகிய பயிர்களில் இருந்து இடம் பெயர்தல் போன்றவைகளால் புழுத் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி விவசாயிகள், தமிழக அரசு தங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்றும் கனமழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்**



தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் இன்றும் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடங்கி ஆங்காங்கே பரவலாக மழை பெய்து வருகிறது. கடலோர மாவட்டங்கள், உள் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு இலங்கை அருகே தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. அந்த காற்றழுத்த தாழ்வுநிலை, நேற்று முன்தினம் குமரிக்கடல் பகுதியில் நிலைக்கொண்டது.

இதன் காரணமாக, கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்துள்ளது. இந்த நிலையில், தற்போது காற்றழுத்த தாழ்வுநிலை மாலத்தீவு, லட்சத்தீவு கடல் பகுதியில் நிலை கொண்டிருப்பதாகவும், இதன் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் இன்றும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியுள்ளார்.

**நிரம்பும் தருவாயில் வைகை அணை**

வைகை அணை நிரம்பும் தருவாயை எட்டி விட்டதால், ஐந்து மாவட்டங்களின் கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்திலும் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் ஆண்டிப்பட்டியில் உள்ள வைகை அணையானது வேகமாக நிரம்பி வருகின்றது. வைகை அணையின் மொத்தக் கொள்ளலவு 71 அடியாகும். தற்போது அணையில் நீர் இருப்பு 66 அடியாக உயர்ந்துள்ளது. இன்னும் 5 அடிகளே அணை நிரம்பவுள்ளதால் அணையின் பாதுகாப்பு கருதி அணை திறக்கப்படவுள்ளது.

இதையடுத்து தேனி, மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் கரையோரமாக வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மாவட்ட நிர்வாகங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

### கிருஷ்ணராஜசாகர் அணையில் 3.318 டிஎம்சி வண்டல்

கிருஷ்ணராஜசாகர் அணையில் 3.318 டிஎம்சி வண்டல் சேர்ந்துள்ளது என்று நீர்வளத் துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் தெரிவித்தார்.

கர்நாடக சட்டப்பேரவையில் திங்கள்கிழமை கேள்வி நேரத்தின் போது மஜத உறுப்பினர் கோபாலையா எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதில் வருமாறு: கிருஷ்ணராஜசாகர் அணை கட்டியதில் இருந்து இதுவரை 3.318 டிஎம்சி வண்டல் மண் சேர்ந்துள்ளது. இது மொத்த கொள்ளளவில் 0.087 சதமாகும். இதனால் அணைக்கு எவ்வித தொந்தரவும் இல்லை.

வண்டல் மண்ணின் அளவு மத்திய நீர் ஆணையம் விதித்துள்ள வரம்புக்கு உள்பட்டதாக உள்ளது. எனவே, இந்த அளவு வண்டல் சேர்ந்துள்ளதால் அணைக்கு எந்தவகையில் இடர்பாடு ஏற்படாது. வண்டல் மண்ணை நீக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார்.

### மதுராந்தகம் ஏரி குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம்: பொதுப்பணித்துறை தகவல்



மதுராந்தகம் ஏரி உடைந்து விட்டதாக கட்செவியில் பரவிய தவறான தகவலை யாரும் நம்பவேண்டாம் என பொதுமக்களுக்கு பொதுப்பணித் துறை திங்கள்கிழமை தெரிவித்தது. தொடர்மழையால் மதுராந்தகம் ஏரி தனது முழுக் கொள்ளவை எட்டி அதன் உபரி நீர் கிளியாற்றில் வெளியேறி வருகிறது. ஞாயிற்றுக்கிழமை பெய்த பலத்த மழையால் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்தவண்ணம் உள்ளது. திங்கள்கிழமை மாலை 5 மணி நிலவரப்படி, சுமார் 18 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணிக்கு சமூக விரோதிகள் சிலர் கட்செவி மூலம் ஏரி உடைந்து விட்டதாகவும், இதனால் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் சிலர் தகவல் பரப்பினர். இதனால் இப்பகுதி மக்கள் அச்சத்துக்கு உள்ளாயினர். இத்தகவலை அறிந்த மதுராந்தகம் பொதுப்பணித் துறை (ஏரி பாசன) அதிகாரிகள், இது தவறான தகவல். இதுகுறித்து போலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் உபரி நீர் மணிக்கு ஒருமுறை அதிகரித்தவண்ணம் உள்ளதால் ஏரியிலிருந்து உபரி நீர் கிளியாற்றின் மூலம் செல்கிறது.

இந்த நீரால் முள்ளி, முன்னித்திகுப்பம், கிணார், கத்திரிச்சேரி, வளர்பிறை போன்ற 12 கிராமங்களை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. இதனால் அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

தினகரன்

**உணவு பாதுகாப்பு சட்டம் தமிழகம் தவிர அனைத்து மாநிலமும் மார்ச்சுக்குள் அமல்**




புதுடெல்லி: டெல்லியில் மாநிலங்களின் உணவுத்துறை செயலாளர்களை சந்தித்து ஆலோசனை நடத்தியபின் டெல்லியில் நேற்று பேட்டியளித்த மத்திய உணவுத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் கூறியதாவது: நாட்டில் உள்ள 3ல் 2 பங்கு மக்களுக்கு ரூ.1 முதல் ரூ.3 விலையில் மாதந்தோறும் 5 கிலோ உணவு தானியம் வழங்கும் வகையில், உணவு பாதுகாப்பு சட்டம் நாடாளுமன்றத்தில் கடந்த 2013ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதை அனைத்து மாநிலங்களும் மற்றும் யூனியன் பிரதேசங்களும் அமல்படுத்த ஒரு ஆண்டு கால அவகாசம் வழங்கப்பட்டது. இதற்கான காலக்கெடு 3 முறை நீட்டிக்கப்பட்டது. இதுவரை 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இச்சட்டத்தை அமல்படுத்தியுள்ளன. ஆந்திராவும், சிக்கிம் ஆகிய மாநிலங்கள் அடுத்தமாதம் இச்சட்டத்தை அமல்படுத்துகின்றன. உபி, மேகாலயா, காஷ்மீர், அந்தமான் ஆகியவை வரும் ஜனவரியில் அமல்படுத்துவதாக கூறியுள்ளன. குஜராத், கேரளா, அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து ஆகியவை வரும் மார்ச் மாதத்துக்குள் அமல்படுத்தவுள்ளன. இச்சட்டத்தை தமிழகம் தவிர அனைத்து மாநிலங்களும் அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குள் நிறைவேற்றும். பொது விநியோக திட்டம் அமலில் இருப்பதால், இச்சட்டத்தை அடுத்தாண்டு ஜூலை மாதம் முதல் அமல்படுத்துவதாக தமிழகம் கூறியுள்ளது. கம்யூட்டர் மயமாக்கும் பணிகள் இன்னும் முடிவடையாததால், உணவு பாதுகாப்பு சட்டத்தின் பயனாளிகளை கண்டறிவதில் சிரமம்

உள்ளதாகவும் தமிழக அதிகாரிகள் கூறியுள்ளனர். உணவு பாதுகாப்புக்கான பணத்தை பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தும் திட்டம் முதல் கட்டமாக புதுச்சேரி மற்றும் சண்டிகரில் அமல்படுத்தப்படுகிறது.

**கனமழையால் 10 லட்சம் ஏக்கர் சம்பா தாளடி பயிர்கள் நாசம்: பயிர் காப்பீடு தொகை அரசு வழங்க விவசாயிகள் கோரிக்கை**



கனமழையால் சம்பா தாளடி பயிர்கள் நீரில் மூழ்கியதை அடுத்து பயிர் காப்பீட்டு தொகையை வழங்க வேண்டும் என்று காவிரி டெல்டா விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் 10 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா தாளடி பயிர்கள் முழுவதும் நீரால் சூழப்பட்டுள்ளது. பயிர்கள் அழுக தொடங்கியுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இப்பகுதிகளில் போர்க்காள அடிப்படை நிவாரண பணிகளை தமிழக அரசு துவங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள விவசாயிகள், பயிர் காப்பீடு ப்ரீமியம் தொகையை முழுவதும் அரசு செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். கடன் நிலுவையை காரணம் காட்டி கூட்டுறவு வங்கிகளில் கடன் தராத நிலையில் விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு இடையே, சம்பா தாளடி பயிர் செய்துள்ளனர். தற்போது இந்த பயிர்களும் மழை வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதால் காவிரி டெல்டா விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். \\

**முட்டை விலை 350 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல்: முட்டை கொள்முதல் விலை 10 காசு குறைந்துள்ளது. தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழுவின் விலை நிர்ணயகுழு கூட்டம் நாமக்கல்லில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் முட்டையின் பண்ணை கொள்முதல் விலையில் 10 காசுகள் குறைக்கப்பட்டு, ஒரு முட்டையின் விலை 350காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. அதே போல், ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.58, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.60 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை குறைந்துள்ளதால், நாமக்கல் மண்டலத்திலும் குறைக்கப்பட்டுள்ளது.

மற்ற மண்டலத்தின் முட்டை விலை (காசுகளில்): பெங்களூரு- 375, மைசூர்- 378, ஹைதராபாத்- 348, மும்பை- 388, விஜயவாடா- 353, கொல்கத்தா- 385, பர்வாலா- 357, டெல்லி- 380.

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

## தமிழகம் மற்றும் ஆந்திராவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட பிரதமர் வருகிறார்?



புதுடெல்லி

தமிழகம் மற்றும் ஆந்திராவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட பிரதமர் நரேந்திரமோடி வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

<u>பிரதமர் மோடி வருகை</u>

தமிழகம் மற்றும் ஆந்திரா மாநிலங்கள் கடுமையான மழை காரணமாகவும், வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவும் வெள்ளச்சேதம் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்கவும் பிரதமர் நரேந்திர மோடி விரைவில் இரு மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்று கூறப்படுகிறது.

தற்போது மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் நரேந்திர மோடி 25–ந்தேதி அதிகாலை 2 மணிக்கு டெல்லி திரும்புகிறார்.

<u>ஹெலிகாப்டரில் பார்வையிடுகிறார்</u>

பிரதமர் நரேந்திர மோடி அன்று பிற்பகல் தமிழகம் மற்றும் ஆந்திராவில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிடுவார் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமரின் வருகை குறித்து தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வெள்ளப் பகுதிகளை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை இரு மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து விரைவில் முடிவெடுக்கப்படும். பிரதமர் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை முடித்து திரும்பி வந்ததும் இந்தப் பயணம் குறித்து அவருடைய ஒப்புதல் பெற்று இதர ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டது.

<u>மத்திய குழுவும் வருகிறது</u>

பிரதமரின் வருகை தவிர வெள்ளப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள இழப்புகள் தொடர்பான ஆய்வு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக மத்திய அரசால் நியமிக்கப்படும் குழுவினரும் விரைவில் தமிழகம் மற்றும் ஆந்திர பிரதேச பகுதிகளுக்கு வருகை தருவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறப்படுகிறது.

**தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் இன்று மழை பெய்யும்; வானிலை ஆய்வு மையம் தகவல்**




சென்னை,

மாலத்தீவு, லட்சத்தீவு கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.காற்றழுத்த தாழ்வுநிலை தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது முதல் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. கடலோர மாவட்டங்கள், உள் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு இலங்கை அருகே தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது.


அந்த காற்றழுத்த தாழ்வுநிலை, நேற்று முன்தினம் குமரிக்கடல் பகுதியில் நிலைக்கொண்டது. இதன் காரணமாக, கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழைபெய்துள்ளது.இந்த நிலையில், தற்போது காற்றழுத்த தாழ்வுநிலை மாலத்தீவு, லட்சத்தீவு கடல் பகுதியில் நிலை கொண்டிருப்பதாகவும், இதன் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அனேக இடங்களில் மழை பெய்யும்

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களுக்கு நேற்று பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-குமரிக்கடல் பகுதியில் நேற்று (நேற்று முன்தினம்) நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை, இன்று(நேற்று) காலை 8.30 மணி நிலவரப்படி, மேற்கு நோக்கி நகர்ந்து, மாலத்தீவு மற்றும் லட்சத்தீவு கடல் பகுதியில் நிலைக்கொண்டுள்ளது.இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று), தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும். ஓரிரு இடங்கள் என்பது நீலகிரி, ராமநாதபுரம், திருப்பூர் ஆகிய இடங்களாக இருக்கலாம் என்று ‘கம்ப்யூட்டர்’ கணிப்புப்படி தெரிகிறது.
மழை அளவு

சென்னையை பொறுத்தவரையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. இன்று (நேற்று) காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

மயிலாடுதுறை 20 செ.மீ., காரைக்கால் 19 செ.மீ., பாபநாசம் 15 செ.மீ., கடலூர், விழுப்புரம், செய்யூர், தரங்கம்பாடி ஆகிய இடங்களில் தலா 14 செ.மீ., பரங்கிப்பேட்டை 13 செ.மீ., கொடவாசல் 12 செ.மீ., பண்ருட்டி, மணியாச்சி, சீர்காழி, அணைக்காரன்சத்திரம், விருதாசலம், ஜெயம்கொண்டம், தொழுதூர் ஆகிய இடங்களில் தலா 11 செ.மீ., நாகப்பட்டினம், திருவாரூர், உத்திரமேரூர், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் தலா 10 செ.மீ., பாண்டிச்சேரி, கே.எம்.கோவில், அரக்கோணம், சேத்தியாதோப்பு ஆகிய இடங்களில் தலா 9 செ.மீ. மழை பெய்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**கடல் நீரிலிருக்கும் உப்பை பிரித்தெடுக்கும் ‘நானோ துளைகள்’**



வருங்காலத்தில் குடிதண்ணீருக்காக யுத்தமே நடக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். எனவே தண்ணீர் தட்டுப்பாடு மற்றும் அதன் விளைவாக ஏற்படக்கூடிய வறட்சி, உயிரிழப்பு உள்ளிட்ட பல்வேறு ஆபத்துகளை தவிர்க்க போதுமான அளவுக்கு குடிநீரை உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனால் உலக விஞ்ஞானிகள் குடிநீர் உற்பத்தி தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவற்றில் ஒன்றுதான் கடல் நீரிலிருக்கும் உப்பை நீக்கி அதனை குடிநீராய் மாற்றுவது.

கேட்பதற்கு மிகவும் சுலபமானது போலத் தோன்றும் இந்த முயற்சி ஒன்றும் புதிதல்ல. பல வருடங்களாக வெவ்வேறு தொழில்நுட்ப முறைகள் மூலமாக முயற்சிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் முழுமையான வெற்றி அடையாமல் இருக்கும் ஒரு நீண்டகால முயற்சி இது.

ஆனால் தற்போது அதிர்ஷ்டவசமாக, அமெரிக்காவிலுள்ள இலினாய் பல் கலைக்கழகத்தின் எந்திர அறிவியல் மற்றும் பொறியியல் துறை பேராசிரியர் நாராயண அலுறு தலைமையிலான ஆய்வுக்குழுவினர் கடல் நீரிலிருக்கும் சுமார் 70 சதவீதம் உப்பை நீக்கும் திறனுள்ள 'நானோபோர்' எனும் ஒரு புதிய கருவியை கண்டுபிடித்துள்ளனர். 'மாலிப்டினம் டைசல்பைடு' எனும் வேதியல் பொருளால் ஆனது இது. ஒரு நானோ மீட்டர் (அதாவது ஒரு மீட்டரில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு) தடிமனுள்ள மற்றும் நானோ அளவிலான பல துளைகள் கொண்ட தாள் போன்ற அமைப்பில் இது இருக்கும். இந்த புதிய கடல்நீர் சுத்திகரிப்பு கருவியானது கடல் நீரிலுள்ள உப்பு மட்டுமல்லாமல் பிற ரசாயனங்களையும் நீக்குகிறது. கடல்நீர் சுத்திகரிப்பைப் பொருத்தவரை உப்பை நீக்கும் ஒரு கருவியை கண்டு பிடித்துவிட்டால் மட்டும் போதாது. மாறாக, உப்பை வெற்றிகரமாக நீக்கும் அதேசமயம் குறைந்த விலையில் இயக்கக்கூடிய மற்றும் ஒரே சமயத்தில் அதிகப்படியான கடல்நீரை சுத்திகரிக்கக்கூடிய திறனுள்ள ஒரு கருவியை கண்டுபிடிக்க வேண்டியது அவசியம் என்கிறார் பேராசிரியர் அலுறு. இதுவரை ஒரு சக்தி வாய்ந்த கடல்நீர் சுத்திகரிப்பு கருவி கண்டுபிடிக்கப் படாததற்கும் இதுவே காரணம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'மிக மிக மெல்லிய மாலிப்டினம் சல்பைடு தாள் கொண்ட இந்த புதிய கருவியில் உள்ள 'மாலிப்டினம்' தண்ணீரை கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டது. ஆனால், இதிலுள்ள மற்றொரு பொருளான சல்பரோ தண்ணீரை வெளியே தள்ளும் குணம் கொண்டது. ஆக, இந்த கருவியில் இருக்கும் ஒரு வேதியியல் பொருள் இயற்கையாகவே தண்ணீரை தள்ள, அதே சமயம் மற்றொன்று கவர்ந்து இழுக்க, ஆற்றல் செலவு எதுவும் இல்லாமல் இயற்கையாகவே அதிகப்படியான தண்ணீர் கருவியினுள் இழுக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது' என்கிறார் குழுவின் மற்றொரு ஆய்வாளரான முஹம்மது ஹெய்ரானியன்.

தற்போது இந்த கருவியை பயன்பாட்டுக்கு கொண்டு வர உற்பத்தியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது என்பது மகிழ்ச்சியான செய்தி.

## சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு மழையால் இன்று 10-வது நாளாக தொடர் விடுமுறை



சென்னை,

சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் மாவட்டங்களில் மழை காரணமாக இன்று 10-வது நாளாக பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர்ந்து விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

10-வது நாளாக விடுமுறை

மழை மற்றும் வெள்ளம் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்றும் (செவ்வாய்க் கிழமை) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை 3 மாவட்ட கலெக்டர்கள் வெளியிட்டுள்ளனர்.சென்னை உள்பட தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தாலும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு அதிர்ஷ்ட பரிசாக 10 நாட்கள் தொடர் விடுமுறையாக கிடைத்துள்ளது. இதனை மாணவர்கள் நன்றாக அனுபவித்து வருகிறார்கள்.

12-ந் தேதி முதல்

கடந்த 12-ந் தேதி கனமழை காரணமாக விடுமுறை அறிவிக்கப்பட்டது. பின்னர் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், ஏரிகள் நிரம்பி வழிந்து வெள்ளம் ஓடுவதாலும் தொடர்ந்து விடுமுறை விடப்பட்டு வருகிறது. சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள் தவிர மழைக்காக மட்டும் இன்று 10-வது நாளாக

தொடர்ந்து விடுமுறை விடப்பட்டுள்ளது.அதிகாரபூர்வ விடுமுறை 10-வது நாள் என்றாலும், தீபாவளி பண்டிகைக்கு முந்தைய சனிக்கிழமையான 7-ந் தேதிக்கு பின்னர் பள்ளிகள் எதுவும் திறக்கப்படவில்லை. இதன்படி பார்த்தால் தொடர்ந்து 18 நாட்களாக பள்ளிகளுக்கு விடுமுறையாகிறது. சென்னையில் பள்ளிகளுக்கு இயற்கை பேரிடர்களுக்காக தொடர்ந்து 10 நாட்கள் விடுமுறை வழங்கப்படுவது இதுவே முதல்முறை.

அதிகபட்சம் 4 நாட்கள்

இதற்கு முன்னர் 2004-ம் ஆண்டு சுனாமி தாக்குதல் ஏற்பட்டபோதும், 2005-ம் ஆண்டு புயல் மழை காரணமாகவும் தொடர்ந்து 4 நாட்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டதே அதிகபட்சமாக இருந்தது. அதனை தொடர்ந்து 2008-ம் ஆண்டு 3 நாட்களும், 2010-ம் ஆண்டு 2 நாட்களும் விடுமுறை விடப்பட்டது.

இதுதவிர 2005-ம் ஆண்டு இலங்கை தமிழர் பிரச்சினைக்காக கடுமையான போராட்டங்கள் நடந்ததால் அரசு அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் 3 நாட்கள் விடுமுறை அறிவித்தது குறிப்பிடத்தக்கது. சென்னை பல்கலைக்கழகமும் தொடர்ந்து தேர்வுகளை கடந்த ஒரு வாரமாக ஒத்திவைத்து வருகிறது.

சனிக்கிழமையும் இயங்கும்

இந்த விடுமுறையை ஈடுகட்டவும், எஞ்சியிருக்கும் பாடங்களை நடத்தி முடிக்கவும் வசதியாக மழைக்கு பின்னர் பள்ளி மற்றும் கல்லூரிகளை சனிக்கிழமைகளிலும் இயக்க வேண்டும் என்று உரிய நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருப்பதாக தெரிகிறது.

## சங்கராபரணி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை



சங்கராபரணி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<u>வீடூர் அணை திறப்பு</u>

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள வீடூர் அணை நேற்று அதிகாலை நிரம்பியது. இதனால் அணையை திறக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து நேற்று காலை அணை திறக்கப்பட்டது. வினாடிக்கு 5 ஆயிரத்து 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>சீறிப்பாயும் தண்ணீர்</u>

வீடூர் அணை திறக்கப்பட்டுள்ளதால் சங்கரபரணி ஆற்றில் தண்ணீர் சீறிப்பாய்ந்து செல்கிறது. இரு கரைகளையும் தொட்டவாறு ஆர்ப்பரித்து செல்லும் தண்ணீரை கரையோர பகுதியில் வசிக்கும் மக்களும், பக்கத்து ஊர்களை சேர்ந்த மக்களும் ஆர்வத்துடன் பார்வையிட்டு செல்கின்றனர்.

சுத்துக்கேணி, மணலிப்பட்டு, பிள்ளையார்குப்பம் உள்பட பல்வேறு இடங்களில் கட்டப்பட்டுள்ள படுகை அணைகளை தாண்டி தண்ணீர் செல்வது கண்கொள்ளா காட்சியாக உள்ளது. அந்த படுகை அணைகளில் இளைஞர்கள் ஆற்று தண்ணீரில் டைவ் அடித்து குளித்து மகிழ்கின்றனர்.

<u>எச்சரிக்கை</u>

தொடர்ந்து மழை பெய்தால் வீடூர் அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே சங்கராபரணி ஆற்றில் கூடுதல் வெள்ளம் வரும் என்பதால் கரையோர பகுதி மக்களுக்கு புதுச்சேரி மாவட்ட நிர்வாகம் சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வருவாய்த்துறையினர் ஆட்டோக்களில் ஒலிபெருக்கியை கட்டி ஆற்றில் யாரும் இறங்கவேண்டாம் என்று எச்சரித்து வருகின்றனர்.

## பலத்த மழையால் சேதமடைந்த பாகூர் பகுதியில் அமைச்சர் தியாகராஜன் ஆய்வு



மழைநீர் தேங்கிய பகுதியை வைத்தியநாதன் எம்.எல்.ஏ. பார்வையிட்டபோது எடுத்தபடம்.

பாகூர் பகுதியில் மழை சேதங்களை அமைச்சர் தியாகராஜன் ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

வீடுகள் சேதம்

புதுவை மாநிலம் பாகூர் பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்தது. இதன் காரணமாக பாகூர், கிருமாம்பாக்கம், தவளக்குப்பம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பல கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மழைநீர் புகுந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால் கன்னியக்கோவில், மூர்த்திக்குப்பத்தில் தலா 2 வீடுகளும், ஆராய்ச்சிக்குப்பத்தில் 6 வீடுகளும், அரங்கனூரில் 12 வீடுகளும், டி.என்.பாளையத்தில் 3 வீடுகளும் சேதமடைந்தது. பலத்த மழையால் காட்டுக்குப்பம் ஏரி நிரம்பி, தண்ணீர் வெளியேறியதால் பாக்கியலட்சுமிநகர் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது.

அமைச்சர் ஆய்வு

இந்நிலையில் அமைச்சர் தியாகராஜன் பாகூர் தொகுதிக்குட்பட்ட மேல்பரிக்கல்பட்டு, ஆராய்ச்சிக்குப்பம் உள்ளிட்ட பகுதிகளை மழை சேதத்தை ஆய்வு செய்தார். அப்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். குடியிருப்பு பகுதியில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்ற அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

இதன்பின்னர் வருவாய்த்துறை சார்பில் பரிக்கல்பட்டு, ஆராய்ச்சிக்குப்பம், கொம்மந்தான்மேட்டு ஆகிய கிராமங்களை சேர்ந்த சுமார் 500–க்கும் மேற்பட்டவர்களுக்கு உணவு வழங்கினார். இந்த ஆய்வின்போது கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் முத்துலிங்கம், தாசில்தார் பிரபாகரன் உள்பட அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

## புதுவையில், தொடர் மழையால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம் கலெக்டர் மணிகண்டன் தகவல்

புதுவையில் தொடர் மழையால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம் ஓரிரு நாளில் வழங்கப்படும் என்று கலெக்டர் மணிகண்டன் தகவல் தெரிவித்துள்ளார்.

ஆலோசனை கூட்டம்

புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பேரிடர் அலுவலகத்தில் அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் மணிகண்டன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் துணை கலெக்டர்கள் வின்செென்ட் ராயர், ராஜமாணிக்கம் மற்றும் அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப்பணிகள் குறித்தும், மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கணக்கெடுக்கும் பணி குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

முன்னதாக கலெக்டர் மணிகண்டன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

ரூ.4 லட்சம் நிவாரணம்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகில் உள்ள வீடூர் அணை நிரம்பியது. இதனை தொடர்ந்து சங்கராபரணி ஆற்றில் அதிக நீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே ஆற்றின் கரையோர பகுதிகளில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் 7 மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் வருவாய்துறை சார்பில் நேற்று மட்டும் 2 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டது. மேலும் அந்த மையங்களில் சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டது.

கடந்த சில நாட்களாக பெய்து வந்த தொடர்மழையில் புதுவையில் மட்டும் இதுவரை 268 வீடுகள் சேதம் அடைந்துள்ளது. 2 பேர் உயிர் இழந்துள்ளனர். அவர்களின் குடும்பத்தினருக்கு அரசு சார்பில் தலா ரூ.4 லட்சம் நிவாரணம் வழங்கப்பட உள்ளது. இந்த நிவாரணம் இன்னும் ஓரிரு நாளில் வழங்கப்படும். சேதம் அடைந்த வீடுகளுக்கும் சேதத்தின் மதிப்பை கணக்கிட்டு உரிய நிவாரணம் வழங்கப்படும்.

<u>சேதம் குறித்த அறிக்கை</u>

புதுவையில் தொடர் மழையால் எங்காவது பாதிப்பு ஏற்பட்டால் உடனே வருவாய்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். புதுவையில் தொடர் மழையால் ஏற்பட்ட சேதத்தை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. வருவாய்துறை, வேளாண்துறை, கால்நடை நலத்துறை, பொதுப்பணித்துறை உள்பட அனைத்து துறை ஊழியர்களும் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் ஓரிரு நாட்களில் கணக்கெடுக்கும் பணி முடிவடைந்து விடும். பின்னர் இந்த மழையால் ஏற்பட்ட சேதம் குறித்த அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு கலெக்டர் மணிகண்டன் கூறினார்.

## வீராணம் ஏரியில் நீர்வரத்து அதிகரிப்பு: வெள்ளியங்கால் ஓடையில் 3–வது முறையாக தண்ணீர் திறப்பு



காட்டுமன்னார்கோவில்

வீராணம் ஏரியில் நீர்வரத்து அதிகரித்து வருவதால் வெள்ளியங்கால் ஓடையில் 3–வது முறையாக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் 50–க்கு மேற்பட்ட கிராமங்களை வெள்ளம் சூழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நீரிபிடிப்பு பகுதி

கடலூர் மாவட்டத்தில் மிகபெரிய நீர் ஆதாரமாக உள்ள லால்பேடட் வீராணம் ஏரியின் நீர் பிடிப்பு பகுதிகளில் கடந்த 2 நாட்களாக பெய்த கன மழையால் ஏரிக்கு வினாடிக்கு 2,500 கன அடி தண்ணீர் வருகிறது. இதனால் ஏரியின் நீர்மட்டம் 43.55 அடியில் இருந்து 44 அடியாக உயர்ந்தது. மேலும் மழை நீடிக்கும் என்பதால் வீராணம் ஏரியை பாதுகாக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் 3–வது முறையாக லால்பேட்டை வெள்ளியங்கால் ஓடையில் வினாடிக்கு 1,500 கன அடி நீரை திறந்து விட்டனர். மேலும் சேத்தியாத்தோப்பு வி.என்.எஸ். மதகு மூலம் வினாடிக்கு 900 கன அடி தண்ணீரும், சென்னை குடிநீருக்காக வினாடிக்கு 77 கனஅடி தண்ணீரும் திறந்து விட்டனர். இதனால் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் வயல்கள் இதுவரை மீளமுடியாத நிலையில் உள்ளன.

இந்நிலையில் கடந்த 2 தினங்களாக தொடர்ந்து மழை பெய்வதால் வெள்ளியங்கால் ஓடை மற்றும் மணவாய்க்கால் மழை நீரும் அதிகளவு வருவதால் லால்பேட்டை, எள்ளேரி கிழக்கு, சர்வராஜன்பேட்டை, வீரநத்தம், திருநாரையூர், நெய்வாசல், சோழக்கூர், சிறகிழந்தநல்லூர், எடையார், பிள்ளையார்தாங்கல், கீழவன்னியூர், குமராட்சி, நந்திமஙகலம் உள்பட பல்வேறு கிராமங்களில் வெள்ளநீர் சூழும் நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதி மக்களும், விவசாயிகளும் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

### பரவளூரில் மணிமுக்தாறு தரைப்பாலம் தண்ணீரில் மூழ்கியது



விருத்தாசலம்

பரவளூர் மணிமுக்தாறு தரைப்பாலம் தண்ணீரில் மூழ்கி அடித்துச் செல்லப்பட்டதால் 20 கிராமங்களிடையே போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

கனமழை

விருத்தாசலம் பகுதியிலும் கடந்த 2 தினங்களாக 24 மணி நேரமும் இடைவிடாமல் மழைக்கொட்டி தீர்த்தது. விருத்தாசலம், மாத்தூர், வேப்பூர், கள்ளக்குறிச்சிப் பகுதிகளில் பெய்த மழையினால் விருத்தாசலம் மணிமுக்தாற்றில் நேற்று முன்தினம் முதல் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தற்போது விருத்தாசலம் அணைக்கட்டில் இருந்து 25 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் பரவளூர்எருக்கன்குப்பம் இடையே அமைக்கப்பட்டிருந்த மண்ணால் ஆன தரைப்பாலம் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் பரவளூர் வழியாக எருக்கன்குப்பம், அண்ணாநகர், களரன்குப்பம், ரெட்டிக்குப்பம், தொட்டிக்குப்பம், பட்டி, பரூர் உள்ளிட்ட 20க்கும்ம் மேற்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. விவசாயிகளும், பள்ளிக்கல்லூரி செல்லும் மாணவர்களும் இதனால் மிகவும் அவதியடைந்துள்ளனர்.

கடந்த 5 வருடங்களுக்கு பிறகு மணிமுக்தாற்றில் தண்ணீர் வந்ததால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதனால் வெகுவாக குறைந்த நிலத்தடி நீர் உயரும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். விருத்தாசலம் பாலக்கரை, மற்றும் விருத்தாசலம் புறவழிச்சாலையில் உள்ள பாலத்தில் பொதுமக்கள் திரண்டு நின்று ஆற்றில் தண்ணீர் செல்வதை வேடிக்கை பார்த்து வேடிக்கையாக பார்த்து ரசித்தனர்.

### அறுவடைக்கு தயாரான நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



தொடர் மழையால் சின்னம்பள்ளி பகுதியில் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியும், சாய்ந்தும் சேதமடைந்தது. மாவட்டம் முழுவதும் பெய்த இந்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

தொடர் மழை

தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. மேலும் வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள வாணியாறு அணை, வரட்டாறு அணை, கேசர்குளி அணை, பஞ்சப்பள்ளி சின்னாறு அணை, தொப்பையாறு ஆகிய 5 அணைகள் நிரம்பி உள்ளன. நாகாவதி அணை உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி வருகிறது.மாவட்டம் முழுவதும் உள்ள 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஏரிகள், குளங்கள் நிரம்பி உள்ளது. மேலும் 25 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஏரிகளில் 50 சதவீத தண்ணீர் நிறைந்துள்ளது. இதனிடையே தர்மபுரி மாவட்டத்தில் நேற்று காலை முதல் இரவு வரை பல்வேறு இடங்களில் தொடர்ந்து மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை அரூர் பகுதியில் அதிகபட்சமாக 43.50 மில்லி மீட்டர் மழை பதிவானது. பாப்பிரெட்டிப்பட்டியில் 33.30 மி.மீ. ஒகேனக்கல்லில் 18.20 மி.மீ. மழையும் பதிவானது. பென்னாகரத்தில் 12.90 மி.மீ, மாரண்டஅள்ளியில் 9 மி.மீ, பாலக்கோட்டில் 13.30 மி.மீ. தர்மபுரியில் 11 மி.மீ. கலெக்டர் அலுவலகத்தில் 13 மி.மீ. மழையும் பதிவானது.

நெல் பயிர்கள் சேதம்

தர்மபுரி மாவட்டத்தில் பெய்து வரும் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தர்மபுரி நகரில் உள்ள பெரும்பாலான சாலைகள் வெறிச்சோடி காணப்படுகிறது. பஸ் நிலையம் உள்ளிட்ட முக்கிய சாலைகளில் பொதுமக்கள் குடைகளை பிடித்தபடி சென்றனர். தொடர்மழை காரணமாக நேற்று மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டு இருந்தது. இந்த மழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெரும்பாலான சாலைகள் சேதமடைந்துள்ளன.

பெரும்பாலை அருகே உள்ள சின்னம்பள்ளி, ராசுராவுத்தனஅள்ளி, அரகாசனஅள்ளி, காளிநாயக்கனூர் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் கடந்த ஒருவாரமாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் இந்த பகுதியில் சுமார் 150 ஏக்கரில் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாிங் நிலையில் இருந்த நெல் பயிர்கள் வயலில் சாய்ந்தும், தண்ணீரில் மூழ்கியும் சேதமடைந்தது. இந்த நெல் பயிருக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிலையில் தொடர் மழை காரணமாக நேற்று முன்தினம் இரவு தொப்பையாறு அணை முழு கொள்ளளவை எட்டி நிரம்பியது. அணையின் பாதுகாப்பு கருதி உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது.

## பெரும்பாறை பகுதியில் பலத்த மழை: கயிறு கட்டி ஆற்றை கடந்து செல்லும் பொதுமக்கள்



பெரும்பாறை

பெரும்பாறை பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் கயிறு கட்டி ஆற்றை கடந்து சென்ற பொதுமக்கள், அங்கு பாலம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆதிவாசி மக்கள்

திண்டுககல் மாவட்டம் பெரும்பாறை அருகே உள்ள கே.சி.பட்டி ஊராட்சியில் உள்ள கல்லககிணறு கிராமத்தில் ஆதிவாசிகள் வசித்து வருகிறார்கள். வீடுகளை கட்டிக்கொள்ளாமல் மலை இடுக்குகளில் வசித்து வந்த இந்த ஆதிவாசி மக்களுக்கு தமிழக அரசின் சார்பில் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன. தற்போது அந்த வீடுகளில் 70 குடும்பங்களை சேர்ந்த சுமார் 300–க்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்த கிராமத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்றால் அந்த பகுதியில் உள்ள புல்லாவெளி ஆற்றினை கடந்து தான் செல்ல வேண்டும். இங்குள்ள பாச்சலூர், பெரியூர், அசன்கோடை, பள்ளத்துககால்வாய் ஆகிய பகுதிகளில் மழை பெய்தால், அந்த தண்ணீர் முழுவதும் இந்த ஆற்றில் தான் வந்து சேருகிறது.

இந்த ஆறு குடகனாற்றுடன் கலந்து திண்டுககல் நகருக்கு குடிநீர் வழங்கும் ஆத்தூர் அணையில் சென்று சேருகிறது. மேலும் அந்த ஆற்று தண்ணீர் மூலம் இப்பகுதியில் ஏராளமானோர் விவசாயமும் செய்து வருகின்றனர்.

கயிற்றின் உதவியுடன்...

இந்த பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வந்தநிலையில் புல்லாவெளி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த ஆற்றினை கடந்து செல்ல பாலம் அமைக்கப்படாத

நிலையில் கல்லககிணறு கிராமத்தில் வசிக்கும் மக்கள் சில நாட்களாக வீடுகளுக்குள் முடங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டது. அதேபோல வெளியூர் சென்றவர்களும் வீடு திரும்ப முடியவில்லை.

இதற்கிடையே நேற்று மழை இல்லாத நிலையில் புல்லாவெளி ஆற்றில் வந்த தண்ணீரின் அளவு குறைந்தது. இதனால் கல்லக்கிணறு கிராமத்து மக்கள் ஆற்றின் இரு கரைப்பகுதிகளிலும் உள்ள மரங்களில் சுமார் 100 அடி நீளத்திற்கு கயிற்றினை கட்டினர்.

பின்னர் அந்த கயிற்றின் உதவியுடன் வெளியே வந்தனர். அந்த பகுதியில் உள்ள குப்பம்மாள்பட்டிக்கு சென்று உணவு பொருட்கள், காய்கறிகள் ஆகியவற்றை வாங்கிக்கொண்டு மீண்டும் கயிற்றினை பிடித்துக்கொண்டே தங்கள் கிராமத்தை சென்றடைந்தனர்.

<u>பாலம் அமைக்க வேண்டும்</u>

இதுகுறித்து அந்த கிராம மக்கள் கூறும் போது, " எத்தனையோ ஆண்டுகளாக மழைககாலங்களில் எங்கள் நிலை இப்படித்தான் உள்ளது. ஆற்றில் தண்ணீர் அதிகமானால் நாங்கள் வீடுகளில் சிறை வைக்கப்படுவோம். பின்னர் தண்ணீர் குறையும் நிலையில் விடுதலை கிடைக்கும். இந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றால் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்து கொடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

## கொடைக்கானலில் சாரல் மழை: 2 இடங்களில் மரங்கள் சாய்ந்தன



கொடைக்கானல்

கொடைக்கானலில் சாரல் மழை பெய்த நிலையில், 2 இடங்களில் மரங்கள் சாய்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பசுமை பள்ளத்தாக்கு

திண்டுக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்து வந்தது. இதன்படி கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் மழை தீவிரமாக இருந்தது. இந்தநிலையில் கொடைக்கானல் பகுதியில் நேற்று பரவலாக சாரல் மழை பெய்தது. ஆனால் வானம் கடுமையான மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

கொடைக்கானலில் உள்ள சுற்றுலா பகுதிகளான பசுமை பள்ளத்தாக்கு மற்றும் பில்லர்ராக் ஆகிய இடங்களுக்கு செல்லும் வழியில் வனத்துறை ஓய்வு விடுதி உள்ளது. அதன் அருகே இருந்த ஒரு மிகப்பெரிய மரம் சாலையின் குறுக்கே வேருடன் சாய்ந்தது. இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதேபோல அங்குள்ள ஏரிச்சாலையிலும் கீழ்பூமி என்ற பகுதியில் மரம் ஒன்று சாலையின் குறுக்கே விழுந்தது. இதனால் அந்த பகுதியிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வெள்ளி நீர்வீழ்ச்சி

இதுகுறித்து தகவல் அறிந்த நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் அந்த பகுதிகளுக்கு விரைந்து சென்றனர். பின்னர் தொழிலாளர்களின் உதவியுடன் அந்த மரங்களை அறுத்து அகற்றினர். இதையடுத்து அந்த பகுதிகளில் போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியது.

கொடைக்கானல் பகுதியில் மழை ஓய்ந்திருந்தாலும், ஏற்கனவே பெய்த பலத்த மழையின் காரணமாக வெள்ளி நீர்வீழ்ச்சி மற்றும் டம்டம் பாறை பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சி, பாம்பாறு நீர்வீழ்ச்சி மற்றும் பியர்சோழா அருவி ஆகியவற்றில் அதிக அளவில் தண்ணீர் கொட்டுகிறது. பலத்த மழை இல்லை என்பதால், கொடைக்கானலுக்கு சுற்றுலாபயணிகளின் வருகை இயல்பாக இருந்தது.

## பழனி–ஒட்டன்சத்திரம் பகுதியில் தொடர்மழை: பரப்பலாறு அணையின் நீர்மட்டம் உயர்வு



சத்திரப்பட்டி

பழனி–ஒட்டன்சத்திரம் பகுதியில் தொடர்மழை பெய்ததால் பரப்பலாறு அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தொடர்மழை

பழனி மற்றும் ஒட்டன்சத்திரம் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் ஒட்டன்சத்திரம் தாலுகா வடகாடு மலைப்பகுதியில் அமைந்துள்ள பரப்பலாறு அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. வரத்து கால்வாய்கள், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்து 120 கன அடி தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது.

இதனால் அணையின் மொத்த உயரமான 90 அடியில் தற்போது 84 அடி வரை தண்ணீர் உள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் அணை அதன் முழு கொள்ளளவை எட்டிவிடும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அணையில் இருந்து 100 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

விவசாயிகள் மகிழ்ச்சி

இதன் மூலம் ஒட்டன்சத்திரம் தாலுகாவிற்கு உட்பட்ட தாசரிபட்டி முத்துபூபாலசமுத்திரம், விருப்பாட்சி பெருமாள்குளம், தங்கச்சியம்மாபட்டி சடையகுளம், ஜவ்வாதுபட்டி பெரியகுளம், வெரியப்பூர் ராமசமுத்திரம், ஓடைப்பட்டி செங்குளம் ஆகிய 6 குளங்களின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

இந்த குளங்கள் மூலம் ஒட்டன்சத்திரம், விருப்பாட்சி, சத்திரப்பட்டி உள்ளிட்ட இடங்களில் உள்ள விவசாய நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். அணை மற்றும் குளங்கள் வேகமாக நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## அலங்காநல்லூர் பகுதியில் தொடர்மழையால் வயலில் வீணாகும் வைக்கோல் நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை



அலங்காநல்லூர்

தொடர் மழை காரணமாக அலங்காநல்லூர் பகுதியில் நெல் அறுவடை செய்தும், பல லட்சம் மதிப்புள்ள வைக்கோல் வீணாகின்றன. இதற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

நெல் அறுவடை

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், கள்ளந்தரி, வாடிப்பட்டி, சோழவந்தான், காஞ்சரம்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விளைநிலங்கள் உள்ளன. இவற்றில் முதல்போக சாகுபடிக்காக முல்லை பெரியாறு அணையிலிருந்து கடந்த ஜூலை 15–ந்தேதி தண்ணீர் திறக்கப்பட்டு நெல் நடவு செய்யப்பட்டது.

அவ்வாறு சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்களை கடந்த 15 நாட்களாக அறுவடை செய்து வருகிறார்கள். இதில் நெல்லில் இருந்து பிரித்து எடுக்கப்படும் வைக்கோல் சேதாரம் இன்றி சேகரித்து வைக்கப்பட்டன. இந்தநிலையில் கடந்த ஒருவார காலமாக மழை பெய்து வருவதால் தற்போது அறுவடை செய்யும் வைக்கோல் மழைநீரால் அழுகி விடுகின்றன.

வீணாகும் வைக்கோல்

இதுகுறித்து ஒரு விவசாயி கூறியதாவது:–

விளைந்த நெற்பயிர்களை அவ்வப்போது மழை குறைந்த நேரத்தில் ராட்சத இயந்திரங்களை பயன்படுத்தி அறுவடை செய்கிறோம். இதில் நெற்கதிர்களை ஓரளவு பாதுகாத்து கரைசேர்க்கின்றோம். ஆனால் கால்நடைகளுக்கு முக்கிய தீவனமான வைக்கோலை ஒன்று சேர்க்கமுடியவில்லை. இதனால் அவை அப்படியே நிலங்களில் கிடந்து வீணாகி போகின்றன. இதனால் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள வைக்கோல் வீணாகிவிடுவதால் விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வருவாய்துறை அதிகாரிகள் அந்தந்த பகுதிகளில் நேரில் ஆய்வு செய்து நிவாரண உதவி வழங்கவேண்டும்.

இவ்வாறு அவர் தெர்வித்தார்.

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் திராட்சை பழங்களில் ஏற்படும் வெடிப்புகள் கட்டுப்படுத்துவது குறித்து பேராசிரியர்கள் விளக்கம்**



உத்தமபாளையம்

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் திராட்சை பழங்களில் ஏற்படும் வெடிப்புகளை கட்டுப்படுத்துவது எப்படி என்பது குறித்து திராட்சை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

திராட்சை விவசாயம்

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது. திராட்சை விவசாயத்தில் புதிய ரகம் மற்றும் ஏற்றுமதி தரம் வாய்ந்த ரக திராட்சைகளை விவசாயம் செய்யவும், விவசாயத்தில் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் ஆனைமலையன்பட்டியில் திராட்சை ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டது.

பல்வேறு ரக திராட்சையை பயிர்செய்ய முதல் கட்டமாக வேர் செடிகள் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து திராட்சை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா ஆகியோர் கூறியதாவது:–

திராட்சையில் வெடிப்பு

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் திராட்சை பழத்தில் ஏற்படும் வெடிப்புகளை கட்டுப்படுத்த கால்சியம் நைட்ரேட் அல்லது கால்சியம் குளோரைடு கலவையை 1 லிட்டர் தண்ணீரில் 10 கிராம் என்ற அளவில் கலந்து திராட்சை பட்டாணி அளவில் இருக்கும் போது ஒருமுறையும், திராட்சை நிறம் மாறும் தருணத்தில் ஒரு முறையும் அதன் பின்பு 15 நாட்கள் கழித்து மற்றொரு முறையும் தெளித்தால் பழங்களின் தோல் கெட்டியாகி பழம் வெடிப்பது குறைந்து விடும்.

விவசாயிகளுக்கு எந்தவித சந்தேகங்களுக்கும் விரிவாக பதில் அளிக்க ஆராய்ச்சி மையத்தில் விஞ்ஞானிகள் தயாராக இருப்பார்கள். திராட்சை விவசாயத்தை பொறுத்தவரை அதிக அளவில் லாபம் ஈட்ட ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சை ரகங்களை பயிர் செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும். மேலும் விபரம் பெற திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு விவசாயிகள் நேரடியாக வந்து சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்று செல்லலாம்.

மேற்கண்டவாறு அவர்கள் கூறினார்கள்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழையால் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியை தாண்டியது



தேனி

முல்லைப்பெரியாறு அணைப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக அணையின் நீர்மட்டம் 136 அடியை தாண்டியது.

முல்லைப்பெரியாறு அணை

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீராதாரமாக முல்லைப்பெரியாறு அணை திகழ்கிறது. இந்த அணை தமிழக–கேரள மாநில எல்லையில் அமைந்து உள்ளது. இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இந்த மழையால் அணைக்கு அதிக அளவில் நீர்வரத்து ஏற்பட்டு உள்ளது.

நேற்று முன்தினம் காலையில் அணையின் நீர்மட்டம் 135.40 அடியாக காணப்பட்டது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 2 ஆயிரத்து 213 கனஅடியாக இருந்தது.

136 அடியை கடந்தது

நேற்று முன்தினம் இரவு முழுவதும் விட்டு, விட்டு மழை பெய்தது. அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்ததால் அணையின் நீர்மட்டம் நேற்று அதிகாலையில் 136 அடியை எட்டியது.

நேற்று காலை 8 மணியளவில் நீர்மட்டம் 136.10 அடியாக இருந்தது. நீர்வரத்து அணைக்கு வினாடிக்கு 5 ஆயிரத்து 554 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 511 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. அணையின் நீர் இருப்பு 6 ஆயிரத்து 143 மில்லியன் கன அடியாக உயர்ந்தது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் கடந்த 1979–ம் ஆண்டு 152 அடியில் இருந்து 132 அடியாக குறைக்கப்பட்டது. இதுதொடர்பாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், இந்த அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு மே மாதம் 7–ந்தேதி தீர்ப்பு அளித்தது. இதையடுத்து அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி மூவர் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. இந்த கண்காணிப்பு குழுவினர் அணையில் ஆய்வு செய்து, அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்துவதற்கான பணிகளை தொடங்கி வைத்தனர். அணையில் 136 அடி நீர்மட்டத்தை எட்டிய பிறகு உபரிநீர் வெளியேறும் பகுதியில் உள்ள 13 மதகுகளை கீழே இறக்கி, நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தும் பணி தொடங்கியது.

2–வது நிகழ்வு

கடந்த ஆண்டு மழையும் கைகொடுத்ததால் அக்டோபர் மாதம் 31–ந்தேதி அணையின் நீர்மட்டம் 136 அடியை எட்டியது. தொடர்ந்து நவம்பர் மாதம் 20–ந்தேதி அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டி வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாக பதிவானது. இந்த ஆண்டும் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் அவ்வப்போது பலத்த மழை பெய்து வருவதால் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது.

உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தபிறகு 2–வது முறையாக அணையின் நீர்மட்டம் 136 அடிக்கு மேல் தேக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. நீர்மட்டம் உயர்வால் தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 5 மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தேனி மாவட்டத்தில் தொடர்மழை: வைகை அணையின் நீர்மட்டம் 66 அடியை எட்டியது



ஆண்டிப்பட்டி

தேனி மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால் வைகை அணையின் நீர்மட்டம் 66 அடியை எட்டி வருகிறது. இதனால் கரையோர கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<u>வைகை அணை</u>

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை உள்ளது. 71 அடி உயரம் கொண்ட இந்த அணையில் தற்போது பெய்து வரும் தொடர் மழையினால் நீர்மட்டம் 'கிடு,கிடு'வென உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக கடந்த வாரம் 55 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று காலை 8 மணியளவில் 65 அடியாக உயர்ந்தது. ஒரே வாரத்தில் 10 அடி வரை நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

தற்போது வைகை அணையின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது. பொதுவாக வைகை அணையின் நீர்மட்டம் 66 அடியாக உயர்ந்தவுடன் வைகை ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களுக்கு முதலாம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்படும். அதன்பின்னர் 68.50 அடியில் 2–ம் கட்ட எச்சரிக்கையும், 69 அடியில் 3–ம் கட்ட எச்சரிக்கையும் விடுக்கப்படும்.

<u>அபாய எச்சரிக்கை</u>

அதன்பின்னர் அணைக்கு வரும் தண்ணீர் உபரிநீராக ஆற்றில் திறந்து விடப்படும். இந்த நிலையில் வைகை அணையின் நீர்மட்டம் 65 அடியை தாண்டியுள்ளது. இதே நிலை தொடர்ந்தால் இன்று

(செவ்வாய்க்கிழமை) மாலைக்குள் அணையின் நீர்மட்டம் 66 அடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து வைகை கரையோர மக்களுக்கு முதல் வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்யும் பட்சத்தில் வைகை அணை நீர்மட்டம் ஓரிரு நாட்களில் முழுக்கொள்ளளவை எட்டும் வாய்ப்பும் உள்ளது.

அணைக்கு நீர்வரத்து 2 ஆயிரத்து 750 கனஅடியாக இருந்த நிலையில், அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 4,608 மில்லியன் கனஅடியாக இருந்தது.

**ஆண்டிப்பட்டி பகுதியில் தொடர் மழையால் பயிர்கள் நாசம் விவசாயிகள் கண்ணீர்**



ஆண்டிப்பட்டி,

ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக தோட்டப்பயிர்கள் நாசமடைந்துள்ளன. கத்தரிக்காய் செடியிலேயே அழுகியதால் விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகிறார்கள்.

விவசாய பயிர்கள் சேதம்

தேனி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் விவசாய பயிர்கள் சேதமடைந்து வருகிறது. ஆண்டிப்பட்டி அருகே வைகை ஆற்றங்கரை பகுதிகளில் அமைந்துள்ள புள்ளிமான்கோம்பை, தர்மத்துப்பட்டி, அணைக்கரைப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் தோட்டப்பயிர்கள் சேதமடைந்துள்ளன.

இந்த பகுதிகளில் அதிகம் விளையும் கத்தரிக்காய்கள் தொடர் மழை காரணமாக செடியிலேயே அழுகி வருகிறது. அணைக்கரைப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள கத்தரிக்காய்கள் செடியிலேயே அழுகி உள்ளன. இதனால் கத்தரிக்காய் சாகுபடி செய்த விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

மேலும் அதே பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு செடிகளும் மழையால் சேதமடைந்துள்ளன. தொடர் மழையால் கரும்பு செடிகள் அப்படியே சாய்ந்துள்ளதால் கரும்பு விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர். ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் மழை தொடர்வதால் விவசாய சேதம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இதற்கிடையே மழை சேதத்தால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து பயன்பெறலாம் மாவட்ட நிர்வாகம் தகவல்




முதல்-அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிதொழிலாளர்கள் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து பயன்பெறலாம் என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் ஒரு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

உழவர் பாதுகாப்பு திட்டம்

தமிழக முதல்-அமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகள், விவசாயக் கூலி குடும்பங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை மற்றும் முதியோர் உதவித்

தொகை ஆகியவை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் புற்றுநோய், காசநோய், சிறுநீரகக் கோளாறு, இருதய நோய், எயிட்ஸ், எச்.ஐ.வி. போன்ற ஆட்கொல்லி நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்கள் சிகிச்சை பெற்று வரும் காலங்களில் அரசு மருத்துவர் (அல்லது) அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் சான்றின்படி மாதம் ரூ.1000 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. பதிவு செய்யலாம் இந்த திட்டத்தில் உறுப்பினராக சேர 5 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு மேற்படாமலும், 2.50 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு மேற்படாமலும் உள்ள விவசாயிகளும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் தகுதி உடையவர்கள் ஆவார்கள். இந்த திட்டத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வயது வரம்பு 18 முதல் 65 வயதிற்குள் இருக்கவேண்டும். இந்த திட்டத்தில் பயனாளியாக சேர ரேஷன் கார்டு அவசியம் இருத்தல் வேண்டும். விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, கோழிப்பண்ணைத் தொழில், பால் பண்ணைத் தொழில், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்கள் செய்வோரும் இந்த திட்டத்தில் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளலாம்.

மூல உறுப்பினர்களை சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களும் இந்த திட்டத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள். குறிப்பிட்ட தகுதிகளை உடைய விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், விவசாயம் சார்ந்த கூலித்தொழிலாளர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரை அணுகி முதல்-அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்து பலன் அடையலாம் என மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### விழுப்புரத்தில் பண்ணைக்குள் மழைநீர் புகுந்தது 3,500 கோழிகள் சாவு



விழுப்புரம்

விழுப்புரத்தில் கோழிப்பண்ணைக்குள் மழைநீர் புகுந்ததில் 3,500 கோழிகள் செத்தன.

கோழிப்பண்ணைக்குள் புகுந்த தண்ணீர்

விழுப்புரம் மகாராஜபுரம் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ராஜா (வயது 45). இவர் அதே பகுதியில் ஆர்.மகாராஜபுரம் என்ற இடத்தில் கோழிப்பண்ணை வைத்துள்ளார். இந்த கோழிப்பண்ணையின் அருகில் மகாராஜபுரம் ஏரி உள்ளது.

3,500 கோழிகள் சாவு

நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த ஏரி நிரம்பி தண்ணீர் வெளியேறியது. இந்த தண்ணீர் அருகில் உள்ள வயல்வெளி பகுதிகளுக்கும், குடியிருப்பு பகுதிகளிலும் தேங்கியது. அப்போது ராஜாவின் கோழிப்பண்ணைக்குள் தண்ணீர் புகுந்தது. இதில் பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த 3,500 கோழிகள் தண்ணீரில் மூழ்கி செத்தன.

இதனிடையே நேற்று காலை ராஜா, தனது பண்ணைக்கு வந்து பார்த்தார். அப்போது கோழிகள் அனைத்தும் செத்து கிடந்ததை பார்த்து கவலையடைந்தார். இதுகுறித்து வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில் அதிகாரிகள் நேரில் சென்று கோழிப்பண்ணையை பார்வையிட்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**காஞ்சிபுரம் மாவட்ட வெள்ளத்தால்_ 25 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நாசம்_: ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்க வலியுறுத்தல்**



காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ளத் தால் 25 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் சேதமடைந்தன. ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண் டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெய்த கனமழையால் ஏரிகள் நிரம்பி, மழைநீர் கரை புரண்டு ஓடியது. இதனால் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாய நிலங் களில் பயிரிடப்பட்ட நெல் மற்றும் தோட்டப் பயிர்கள் சேதமடைந்தன. இந்த பாதிப்பு குறித்து வேளாண் துறையினர் கணக்கெடுத்து வருகின்றனர்.

இதனிடையே பயிர்கள் பாதிப்பு குறித்து காஞ்சிபுரம் மாவட்ட விவ சாயிகள் சங்கச் செயலர் கே.நேரு விடம் கேட்டபோது அவர் கூறிய தாவது: கடந்த 15 நாட்களாக காஞ்சி புரம் மாவட்டத்தில் பெய்த கனமழை யால் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல் மற்றும் வாழை, கரும்பு, கத்தரிக் காய் போன்ற தோட்டப் பயிர்கள் முழுவதுமாக நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன. மழை வெள் ளத்தால் நெல் பயிர்கள் நிலத்தில் சாய்ந்து, நெல் மணிகள் முளைத்து விட்டன. மேலும் 10 ஏக்கரில் நெல் பயிர் செய்வதற்காக விடப் பட்டிருந்த நாற்றுகள், நீரில் மூழ்கி அழுகிவிட்டன. எனவே வெள் ளத்தால் சேதமடைந்த ஒரு ஏக்கர் நெல் பயிருக்கு ரூ.25 ஆயிரமும், ஒரு ஏக்கர் நெல் நாற்றுக்கு ரூ.5 ஆயிரமும் நிவாரணமாக வழங்க வேண்டும்.

மேலும் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் 46 மாடுகள், 300 ஆடுகள், 6 ஆயிரம் நாட்டுக் கோழிகள் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளன. அதனால் மாடுகளுக்கு தலா ரூ.40 ஆயிரம், ஆடுகளுக்கு தலா ரூ.5 ஆயிரம், கோழிகளுக்கு தலா ரூ.400 என நிவாரணம் வழங்க வேண்டும்.

கனமழையால் வேலை வாய்ப்பை இழந்துள்ள விவசாய கூலித் தொழிலாளர்கள் குடும்பங்க ளுக்கு தலா ரூ.5 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். வெள்ளத்தால் சேதமடைந்த 700-க்கும் மேற்பட்ட சாலைகள், 1000-க்கும் மேற்பட்ட மின் கம்பங்களை சீரமைக்க வேண்டும். சேதமடைந்த 244 ஏரிகளையும் புனரமைக்க வேண்டும். சேதம் தொடர்பாக வேளாண்துறை மற்றும் வருவாய் துறையினர் இணைந்து ஆய்வு செய்ய வேண்டும். பாலாற்றில் வெள்ள நீரை சேமிக்க குறைந்தது 5 இடங்களில் தடுப்பணைகளை கட்ட வேண்டும் என்றார்._

## தூத்துக்குடியை சூழ்ந்தது காட்டாற்று வெள்ளம்



தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் கடந்த 5 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இங்குள்ள குளங்கள், கண்மாய்கள் பலவும் ஏற்கெனவே நிரம்பியிருந்தன. நேற்று முன்தினம் இரவு இவ்விரு மாவட்டங்களிலும் விடாமல் கனமழை கொட்டியது.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில், தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை, கடம்பூர், மணியாச்சி, கயத்தாறு பகுதியில் பெய்த கனமழை காட்டாற்று ஓடையில் திடீர் வெள்ளமாக பெருக்கெடுத்தது. வழியெங்கும் குளங்கள் நிரம்பியிருந்ததால், தூத் துக்குடி அருகேயுள்ள கடைமடை குளமான கோரம்பள்ளம் குளம் வழியே 30 ஆயிரம் கன அடிக்கு மேல் உபரிநீர் வெளியேறியது.

இதன் காரணமாக தூத்துக்குடி யின் புறநகர்ப் பகுதியில் அமைந் துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், எஸ்.பி. அலுவலகம், புதுக்கோட்டை, மறவன்மடம், திரவியபுரம், அந்தோணியார்புரம், சோரீஸ்புரம், சிட்கோ தொழில் பேட்டை, கோரம்பள்ளம், மடத்தூர் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட பகுதிகள் தண்ணீரால் சூழப்பட்டன.

அரசு அலுவலகங்கள், கிராமங் களுக்குள் புகுந்த வெள்ளம் இடுப் பளவைத் தாண்டி ஓடியது. வீட்டுப் பொருட்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. வெள்ளத்தில் சிக்கியவர்கள் வீட்டு மொட்டை மாடிகளில் தஞ்சம் புகுந்தனர்.

எந்த அலுவலகத்திலும் நேற்று பணிகள் நடைபெறாமல் செயலிழந்தன. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு படையினர், கடலோர காவல் படையினர் மற்றும் காவல் துறையினர்

தீவிரமாக ஈடுபட்டனர். மொட்டை மாடியில் தங்கியிருந்த மக்களுக்கு படகுகள் மூலம் உணவு வகைகள் விநியோகிக்கப்பட்டன.

**சாலை துண்டிப்பு**

தூத்துக்குடி திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலை மற்றும் தூத்துக்குடி திருச்செந்தூர் சாலையில் வெள்ளம் ஓடியது. இதனால் போக்குவரத்து நிறுத் தப்பட்டது. எனினும், மதுரை அருப்புகோட்டை தூத்துக்குடி வழித்தடத்தில் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெற்றது. நேற்று பகலில் மழை பெய்யாததால் படிப்படியாக வெள்ளம் வடியத் தொடங்கியது._

## ஆயிரம் ஏரிகள் நிரம்பி வழியும் நிலையில்_ வறண்டு கிடக்கும் சின்னம்பேடு ஏரி_: பொன்னேரி அருகே விவசாயிகள் ஏமாற்றம்



▲ பருவ மழை தீவிரத்தால் திருவள்ளூர் மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பியுள்ள நிலையில் வறண்டு காணப்படும் சின்னம்பேடு ஏரி.

கொட்டித் தீர்த்த கனமழையில் திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பியுள்ள நிலையில் பொன்னேரி அருகே உள்ள சின்னம்பேடு ஏரி வறண்டுக் கிடப் பது அப்பகுதி மக்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் கீழ் உள்ள 587 ஏரிகள், ஊராட்சி ஒன்றி யங்களின் கீழ் 649 ஏரிகள் என 1,236 ஏரிகள் உள்ளன. இதில் வடகிழக்கு பருவமழையின் தீவிரத் தால் 1,031 ஏரிகள் முழுமையாக நிரம்பின.

அதே நேரத்தில், பொன்னேரி அருகே உள்ள சின்னம்பேடு ஏரியின் பெரும் பகுதி நீரின்றி, வறண்டு கிடக்கிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிக ளான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரி களுக்கு அடுத்து பரப்பளவில் பெரிய ஏரி என கூறப்படும் இந்த சின்னம்பேடு ஏரி 1,548 ஏக்கர் பரப்பளவு கொண்டது. சுமார் 2 டிஎம்சி தண்ணீரை சேமித்து வைக்க முடியும். இதைக்கொண்டு 6 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

ஆனால் தற்போது மாவட் டத்தில் கொட்டித் தீர்க்கும் மழை யினால் 20 அடி உயரம் கொண்ட சின்னம்பேடு ஏரியில், சிறு சிறு பள்ளங்கள், நீர் வரும் பாதை, கரைகளை ஒட்டிய பகுதிகள் என அங்கொன்றும் இங்கொன்றுமாக குட்டைகளில் மிக குறைந்த அளவில் நீர் தேங்கியிருக்கிறது.

மேலும் ஏரியின் மையப்பகுதி உள்ளிட்ட பெரும்பாலான பகுதி களோ வறண்டுக் கிடப்பதுடன் முட்புதர்களாக மண்டிக் கிடக்கிறது. இதனால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் தரப்பில் கூறப்படுவதாவது: சின்னம் பேடு ஏரிக்கு, ஆரணி ஆறு மற்றும் சிறு சிறு ஏரிகள் உள்ளிட்ட வைகளில் இருந்து உபரி நீர் வந்து சேரும் வகையில் பல வரத்துக் கால்வாய்கள் உள்ளன. பல ஆண்டுகளாக இந்த வரத்துக் கால்வாய்கள் தூர்வாரப்படாமல் போனதால்தான் சின்னம்பேடு ஏரி வறண்டு கிடக்கிறது. கும்மிடிப் பூண்டி அருகே உள்ள பண்பாக்கம் ஏரி, புதுக்கும்மிடிப்பூண்டி ஏரி உள் ளிட்ட ஏரிகளும் இதே காரணங் களால் 20 சதவீதம் கூட நீர் நிரம்பாமல் உள்ளன.

பொதுப்பணித் துறை அதிகாரி களும் மாவட்ட நிர்வாகமும் வருங்காலங்களில் கவனம் செலுத்தினால் மட்டுமே இனி யொரு மழைக்காலங்களில் இந்த ஏரிகள் நிரம்பும். இந்த பகுதியில் விவசாயமும் செழிக்கும் என்று தெரிவித்தனர்.______

பருவ மழை தீவிரத்தால் திருவள்ளூர் மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பியுள்ள நிலையில் வறண்டு காணப்படும் சின்னம்பேடு ஏரி.

**சராசரியை தாண்டியது பருவமழை_: தமிழகத்தில் மழை நீடிக்கும்__- வானிலை ஆய்வு மையம் தகவல்**



காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சராசரி அளவைத் தாண்டி பெய்துள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை ஒரு ஆண்டுக்கான மழையில் 48 சதவீதத்தை வடகிழக்கு பருவமழை காலத்தில்தான் பெறுகிறது. இந்த காலகட்டத்தில் சராசரி மழை அளவு 44 செ.மீ. மட்டுமே.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை கொஞ்சம் தாமதமாகவே தொடங்கியது. வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலைகள் காரணமாக தமிழகத் தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அக்டோபர் 1 முதல் நேற்று வரை 54 நாட்களில் 47 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இது ஆண்டு சராசரியைவிட 3 செ.மீ. அதிகம். பருவமழைக் காலம் முடிய இன்னும் 38 நாட்கள் இருக்கிறது. இந்நிலையில், தொடர்ந்து மழை பெய்து வருவதால், இந்த ஆண்டு மழை அளவு கணிசமாக அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து நீடிப்பதால் தமிழகத்தில் மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:

குமரிக்கடல் பகுதியில் நிலவிய குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, மேற்கு நோக்கி நகர்ந்து, லட்சத்தீவு மற்றும் மாலத்தீவுகள் அருகில் நிலைகொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் மழை பெய் துள்ளது. தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்துக்கு பெரும்பாலான இடங்களில் மழையும், ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்யக் கூடும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது.

இவ்வாறு ரமணன் கூறினார்.

சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சை, தருமபுரி, விழுப்புரம், நெல்லை உள்ளிட்ட மாவட்டங் களிலும் தொடர்ந்து மழை பெய்துவருகிறது.___

**3 மாவட்ட பள்ளி, கல்லூரிக்கு விடுமுறை**

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்றும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்துவரும் மழை, வடியாத வெள்ளம் உள்ளிட்ட காரணங்களால் 3 மாவட்டங்களிலும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர்கள் உத்தரவிட்டுள்ளனர். இந்த மாவட்டங்களில் தொடர்ந்து 17-வது நாளாக பள்ளி, கல்லூரிகள் இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## 66 அடியை தாண்டிய நீர்மட்டம்: வைகை அணையில் வெள்ள அபாய எச்சரிக்கை



ஆண்டிப்பட்டி, நவ.24–

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக வைகை அணைக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்தது. வைகை அணையின் நீர்பிடிப்பு பகுதியான மூலவைகை ஆறு, கொட்டக்குடி ஆறு ஆகிய பகுதிகளில் கனமழை பெய்ததாலும், முல்லைபெரியாற்றில் இருந்து வைகை அணைக்கு கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டதாலும் படிப்படியாக உயர்ந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 66.08 அடியாக உயர்ந்துள்ளது.

அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து இருப்பதால் அதன் முழு கொள்ளளவான 71 அடிவரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2011–ம் ஆண்டிற்கு பிறகு வைகை அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை நெருங்கி வருகிறது. இதனால் தேனி மாவட்ட வைகை ஆற்று கரையோர மக்களுக்கு முதல் வெள்ள அபாய எச்சரிக்கையை கலெக்டர் வெங்கடாசலம் விடுத்துள்ளார்.


இதேபோல வைகை ஆறு செல்லும் கரையோரபகுதியில் உள்ள திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்ட மக்களுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கரையோரத்தில் உள்ள மக்கள் மேடான பகுதிகளுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் இப்பகுதி மக்கள் தங்குவதற்காக பள்ளிகள் மற்றும் சமுதாய கூடங்கள் தயார்படுத்தும் பணியில் வருவாய்த்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அணையின் நீர்மட்டம் 68 அடியை எட்டும்போது 2–வது வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். 69 அடியை எட்டும்போது 3–ம் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு அணையிலிருந்து தண்ணீர்

திறக்கப்படும். இன்று காலை நிலவரப்படி அணைக்கு 3110 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 60 கனஅடி தண்ணீர் மட்டும் திறக்கப்படுகிறது. 4869 மி.கனஅடி நீர் இருப்பு உள்ளது.

## தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் இன்று மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம்



சென்னை, நவ.24- தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது முதல் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. கடலோர மாவட்டங்கள், உள் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு இலங்கை அருகே தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது.

அந்த காற்றழுத்த தாழ்வுநிலை, நேற்று முன்தினம் குமரிக்கடல் பகுதியில் நிலைக்கொண்டது. இதன் காரணமாக, கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்துள்ளது. இந்த நிலையில், தற்போது காற்றழுத்த தாழ்வுநிலை மாலத்தீவு, லட்சத்தீவு கடல் பகுதியில் நிலை கொண்டிருப்பதாகவும், இதன் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களுக்கு நேற்று பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- குமரிக்கடல் பகுதியில் நேற்று (நேற்று முன்தினம்) நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை, இன்று(நேற்று) காலை 8.30 மணி நிலவரப்படி, மேற்கு நோக்கி நகர்ந்து, மாலத்தீவு மற்றும் லட்சத்தீவு கடல் பகுதியில் நிலைக்கொண்டுள்ளது.

இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று), தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

ஓரிரு இடங்கள் என்பது நீலகிரி, ராமநாதபுரம், திருப்பூர் ஆகிய இடங்களாக இருக்கலாம் என்று 'கம்ப்யூட்டர்' கணிப்புப்படி தெரிகிறது. சென்னையை பொறுத்தவரையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. இன்று (நேற்று) காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:- மயிலாடுதுறை 20 செ.மீ., காரைக்கால் 19 செ.மீ., பாபநாசம் 15 செ.மீ., கடலூர், விழுப்புரம், செய்யூர், தரங்கம்பாடி ஆகிய இடங்களில் தலா 14 செ.மீ., பரங்கிப்பேட்டை 13 செ.மீ., கொடவாசல் 12 செ.மீ., பண்ருட்டி, மணியாச்சி, சீர்காழி, அணைக்காரன்சத்திரம், விருதாசலம், ஜெயம்கொண்டம், தொழுதூர் ஆகிய இடங்களில் தலா 11 செ.மீ., நாகப்பட்டினம், திருவாரூர், உத்திரமேரூர், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் தலா 10 செ.மீ., பாண்டிச்சேரி, கே.எம்.கோவில், அரக்கோணம், சேத்தியாதோப்பு ஆகிய இடங்களில் தலா 9 செ.மீ. மழை பெய்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகம் மற்றும் ஆந்திராவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட பிரதமர் வருகிறார்?



புதுடெல்லி, நவ.24- தமிழகம் மற்றும் ஆந்திரா மாநிலங்கள் கடுமையான மழை காரணமாகவும், வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவும் வெள்ளச்சேதம் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்கவும் பிரதமர் நரேந்திர மோடி விரைவில் இரு மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்று கூறப்படுகிறது.

தற்போது மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் நரேந்திர மோடி 25-ந்தேதி அதிகாலை 2 மணிக்கு டெல்லி திரும்புகிறார்.

பிரதமர் நரேந்திர மோடி அன்று பிற்பகல் தமிழகம் மற்றும் ஆந்திராவில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிடுவார் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. பிரதமரின் வருகை குறித்து தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வெள்ளப் பகுதிகளை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை இரு மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து விரைவில் முடிவெடுக்கப்படும். பிரதமர் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை முடித்து திரும்பி வந்ததும் இந்தப் பயணம் குறித்து அவருடைய ஒப்புதல் பெற்று இதர ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டது. பிரதமரின் வருகை தவிர வெள்ளப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள இழப்புகள் தொடர்பான ஆய்வு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக மத்திய அரசால் நியமிக்கப்படும் குழுவினரும் விரைவில் தமிழகம் மற்றும் ஆந்திர பிரதேச பகுதிகளுக்கு வருகை தருவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறப்படுகிறது.

## நீர்பிடிப்பு பகுதியில் பலத்த மழை: பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து இருமடங்காக உயர்வு



ஈரோடு, நவ. 24–

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளதால் ஈரோடு மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது.

பவானிசாகர் நீர்பிடிப்பு பகுதியிலும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு வரும் தண்ணீரின் வரத்தும் அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

நேற்று அணையின் நீர்மட்டம் 73.47 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 2976 கன அடி தண்ணீர் வந்தது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 74.36 அடியாக இருந்தது. இன்று மாலைக்குள் 75 அடியை தாண்டி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பவானிசாகர் நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருகிறது. இதனால் பவானிசாகர் அணையில் நீர்வரத்து இருமடங்காக உயர்ந்துள்ளது.

அதாவது அணைக்கு தற்போது 4787 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

ஈரோடு மாவட்டம் முழுவதும் தொடர் மழை பெய்து வருவதால் பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கும் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டு உள்ளது.

அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## பூண்டி ஏரியில் இருந்து வினாடிக்கு 8,602 கனஅடி தண்ணீர் திறப்பு



ஊத்துக்கோட்டை, நவ.24 பூண்டி ஏரி நீர் பிடிப்பு பகுதிகளிலும், ஆந்திராவிலும் கடந்த சில நாட்களாக பெய்து வரும் பலத்த மழையால் சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி ஏரிக்கு கடந்த 14-ந் தேதி முதல் தண்ணீர் வரத்து தொடங்கியது. வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் தொடங்கி படிப்படியாக தண்ணீர் வரத்து அதிகரித்தது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. 3,231 மில்லியன் கனஅடி தண்ணீர் சேமித்து வைக்கலாம். நேற்று மதியம் 2 மணி நிலவரப்படி ஏரியில் 33.70 அடி நீர் மட்டம் பதிவானது. 2,730 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. வினாடிக்கு 7,780 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. பலத்த மழை காரணமாக பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகமானதால் ஏரியில் இருந்து வினாடிக்கு 8,602 கனஅடி வீதம் கொசஸ்தலை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. ஆந்திராவில் பெய்த பலத்த மழை காரணமாக கிருஷ்ணா நதி கால்வாய் மூலம் வினாடிக்கு 1,200 கனஅடி தண்ணீர் பூண்டி ஏரிக்கு வந்து சேருகிறது.

## மலை பகுதிகளில் கனமழை: குற்றால அருவிகளில் கடும் வெள்ளப்பெருக்கு



தென்மேற்கு வங்க கடலில் ஏற்பட்ட புதிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நெல்லை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மீண்டும் கனமழை பெய்ய தொடங்கி உள்ளது. நேற்று மாவட்டத்தில் பரவலாக பல இடங்களில் மழை பெய்தது. சில பகுதிகளில் மழை தூறிக்கொண்டே இருந்தது. மலைப்பகுதிகளில் கன மழை கொட்டியது.

நேற்று இரவு முதல் இன்று காலைவரை மலைப்பகுதிகளில் கனமழை கொட்டியது. இதனால் குற்றாலம், பாபநாசம், மணிமுத்தாறு அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. குற்றாலத்தில் மெயின் அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் நேற்று இரவு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இன்று காலையிலும் கன மழை பெய்ததால் மெயின் அருவியில் ஆர்ச்சை மூழ் கடித்து வெள்ளம் பாய்ந்தது.

நீர் அருவிக்கரை கடை வீதிகளை சூழ்ந்தது. உடனே போலீசார் அப்பகுதிக்கு சென்று சுற்றுலாப் பயணிகளை அங்கிருந்து வெளியேற்றினர். மேலும் பயணிகள், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டனர். ஐந்தருவி, பழைய குற்றால அருவி, செண்பகாதேவி அருவிகளிலும் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

பின்னர் பகலில் தண்ணீர் குறைந்தது. வெகு நேரத்துக்கு பின்னரே சுற்றுலா பயணிகள், அய்யப்ப பக்தர்கள் அருவியில் குளிக்க அனுமதிக்கப்பட்டார்கள். பேரூராட்சி பணியாளர்கள் விரைந்து சென்று வெள்ள தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தொடர்ந்து அருவிக்கரையில் கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

## தமிழகத்தின் வெள்ள நிவாரணத்துக்கு ஜெயலலிதா ரூ.8,481 கோடி கோரிக்கை: முதல்கட்டமாக மத்திய அரசு ரூ.940 கோடி அனுமதி



சென்னை, நவ.24- தமிழக அரசு சார்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ளசெய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிய பின் கடந்த நவம்பர் 8-ந் தேதி முதல் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து பெய்த கடும் மழையின் காரணமாக பெரும் வெள்ளச்சேதம் ஏற்பட்டதை கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், மீட்பு பணிகளை மேற்கொள்ளவும் முதல்-அமைச்சர் ஜெயலலிதா 500 கோடி ரூபாய் ஒதுக்கி ஏற்கனவே ஆணையிட்டுள்ளார். முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் ஆணையின்படி பாதிக் கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடி நிவாரணம் வழங்கப்படுவதுடன் வெள்ளச் சீரமைப்பு பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின் பேரில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளச் சேத நிவாரணம் மற்றும் சீரமைப்புகளுக்கான தேவை முதற்கட்டமாக 8,481 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை மாநிலஅரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்று முதல்- அமைச்சர் ஜெயலலிதா பிரதமரை கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக உடனடியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்றும், பிரதமரை முதல்-அமைச்சர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார். முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் கடிதமும், வெள்ளச்சேத அறிக்கையும் பிரதமர் அலுவலகத்தில் அளிக் கப்பட்டது. முதல்-அமைச்சர் ஜெயலலிதா கடிதத்தின் அடிப்படையில், மத்திய அரசு உடனடி நிதி உதவியாக 939.63 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசுக்கு விடுவித்து உத்தர விட்டுள்ளது. மேலும்,

வெள்ளச்சேதத்தை முழுமையாக மதிப்பீடு செய்து கூடுதல் நிதியுதவியை பரிந்துரைக்க விரைவில் மத்திய ஆய்வு குழுவையும் தமிழகத்திற்கு அனுப்புவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## 66 அடியை தாண்டிய நீர்மட்டம்: வைகை அணையில் வெள்ள அபாய எச்சரிக்கை



ஆண்டிப்பட்டி, நவ.24–

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக வைகை அணைக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்தது. வைகை அணையின் நீர்பிடிப்பு பகுதியான மூலவைகை ஆறு, கொட்டக்குடி ஆறு ஆகிய பகுதிகளில் கனமழை பெய்ததாலும், முல்லைபெரியாற்றில் இருந்து வைகை அணைக்கு கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டதாலும் படிப்படியாக உயர்ந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 66.08 அடியாக உயர்ந்துள்ளது.

அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து இருப்பதால் அதன் முழு கொள்ளளவான 71 அடிவரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2011–ம் ஆண்டிற்கு பிறகு வைகை அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை நெருங்கி வருகிறது. இதனால் தேனி மாவட்ட வைகை ஆற்று கரையோர மக்களுக்கு முதல் வெள்ள அபாய எச்சரிக்கையை கலெக்டர் வெங்கடாசலம் விடுத்துள்ளார்.

இதேபோல வைகை ஆறு செல்லும் கரையோரபகுதியில் உள்ள திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்ட மக்களுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கரையோரத்தில் உள்ள மக்கள் மேடான பகுதிகளுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் இப்பகுதி மக்கள் தங்குவதற்காக பள்ளிகள் மற்றும் சமுதாய கூடங்கள் தயார்படுத்தும் பணியில் வருவாய்த்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அணையின் நீர்மட்டம் 68 அடியை எட்டும்போது 2–வது வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். 69 அடியை எட்டும்போது 3–ம் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு அணையிலிருந்து தண்ணீர்

திறக்கப்படும். இன்று காலை நிலவரப்படி அணைக்கு 3110 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 60 கனஅடி தண்ணீர் மட்டும் திறக்கப்படுகிறது. 4869 மி.கனஅடி நீர் இருப்பு உள்ளது.

## கீரைகள் விலை கிடுகிடு உயர்வு: ஒருகட்டு சிறுகீரை சில்லரை விலையில் ரூ.40-க்கு விற்பனை



சென்னை, நவ.24- தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் காய்கறிகள் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் காய்கறிகள் வரத்து அதிரடியாக குறைந்து அவற்றின் விலை உயர்ந்து வருகிறது. கத்தரிக்காய், தக்காளி, பீன்ஸ் போன்ற காய்கறிகளின் விலை தொடர்ந்து உச்சத்தில் இருக்கிறது. இந்தநிலையில் தொடர் மழையால் கீரை செடிகள் அழுகி வருவதால், அவற்றின் விலையும் 'கிடுகிடு'வென உயர்ந்துள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த ஒரு வாரத்தில் கீரைகள் விலை 2 மடங்கு அதிகரித்துள்ளது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு கீரை வியாபாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் கோவிந்தராஜ் கூறியதாவது:- வேலூர் மாவட்டம் லத்தேரி, லட்சுமிபுரம், தாங்கல், மோட்டூர், ஈசன்தாங்கல், வாலாஜா, சோழிங்கர் ஆகிய இடங்களில் இருந்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கீரை வரத்து இருந்து வருகிறது. சென்னை நகர மக்களின் தேவைக்காக அன்றாடம் 10 லாரிகள் மூலம் 2 லட்சம் கீரை கட்டுகள் கொண்டு வரப்படுவது வழக்கம். தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் கீரை செடிகள் அழுகி வருகின்றன. இதனால் கடந்த ஒரு வார காலமாக கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அன்றாடம் 5 ஆயிரம் கட்டு கீரைகள் மட்டுமே வரத்து இருக்கிறது.

கீரைகள் வரத்து கடுமையாக குறைந்துள்ளதால், கடந்த வாரம் மொத்த விலையில் ரூ.6 முதல் ரூ.10 வரையில் விற்பனை செய்யப்பட்ட கீரைகள் தற்போது ரூ.15 முதல் ரூ.20 வரை விலை உயர்ந்துள்ளது. இன்றைய(நேற்று) நிலவரப்படி, சிறுகீரை-ரூ.20, அரக் கீரை-ரூ.18, முளக்கீரை-ரூ.18, பொன்னாங்கன்னி கீரை- ரூ.15, பசலைக்கீரை-ரூ.15, பாலக்கீரை-ரூ.15, வெந்தயக்கீரை-ரூ.15, புளிச்சைக்கீரை- ரூ.10, மணத்தக்காளி கீரை-ரூ.10, வெங்காயத்தாள்-ரூ.10 என மொத்த விலையில்

விற்பனை செய்யப்படுகிறது. கீரைகள் விலை ஜனவரி மாதத்துக்கு பிறகே குறைய தொடங்கும். முருங்கை கீரை வரத்து முற்றிலும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார். சில்லரை விலையில் கீரைகள் 2 மடங்கு அதிகரித்துள்ளது. சிறுகீரை நகரின் பெரும்பாலான இடங்களில் ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வு ஏழை-எளிய நடுத்தர மக்களை கடுமையாக பாதித்துள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் தக்காளி விலை ஒரு கிலோ ரூ.70 விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வெளிச்சந்தைகளில் சில்லரை விலையில் ரூ.100 முதல் ரூ.110 வரையில் விற்பனை செய்யப்படுகிறது.
அன்றாட சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் தக்காளி விலை எப்போது குறையும் என்று சென்னை கோயம்பேடு மார்க்கெட் தக்காளி வியாபாரிகள் சங்க தலைவர் தியாகராஜனிடம் கேட்டபோது, 'மழையால் தக்காளி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மிகவும் குறைந்த அளவிலே தக்காளி இறக்குமதி இருந்து வருகிறது. எனவே தற்போது தக்காளி விலை குறைய வாய்ப்பு இல்லை.' என்றார்.

விகடன்

**5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!**

**தேனி:** மதுரை, தேனி உள்ளிட்ட 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.



தமிழகத்தில் கடந்த 10 நாட்களுக்கு மேலாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல ஏரிகள், குளங்கள் நிரம்பி உபரி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், வைகை ஆற்றின் கரையோரத்தில் வசிக்கும் 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார் அம்மாவட்ட ஆட்சியர். தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் உள்ள வைகை அணை 111 அடி உயரம் கொண்டது. இந்த அணை, தனது கொள்ளளவான 71 அடியில் 66 அடியை எட்டி உள்ளது. இதனால், வைகை அணையின் உபரி நீர் எந்த நேரமும் திறக்கப்படலாம் என்பதால், வைகை ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஆட்சியர் எச்சரித்துள்ளார்.

மேலும், இதன் காரணமாக தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.